பதிவு எண் M. 4900. 16-பக்கங்கள்.

# குடிஅரசு

நிறுவியது: 1924.

உள்நாடு வருட சந்தா ரூ. 7-0-0. தனிப்பிரதி 0-2-0.
வெளிநாடு ,, ரூ. 9-0-0. ,, 0-2-6.

மாலை 22 } ஈரோடு 14-5-1949 சனிக்கிழமை } மலர் 36.

# அம்பலத்து அதிசயம்!

★

## மறக்க முடியாத பார்ப்பனக் கொடுமைகள்!

★

தேச விடுதலை விஷயத்தில் பார்ப்பனரல்லாதார் (திராவிடர்) பொது நன்மையை உத்தேசித்து அநேக பார்ப்பனர்களுடைய கொடுமைகளையும், சூழ்ச்சிகளையும் கூட்டாக்காமல், கபடமற்றுப் பார்ப்பனர்களுடன் ஒத்துழைத்து வந்திருந்தாலும், அவர்களுடைய உழைப்பையெல்லாம், அவர்கள் தங்கள் வகுப்புச் சுயநலத்திற்கென்று அநுபவித்துக் கொள்வதல்லாமல், உழைக்கின்ற பார்ப்பனரல்லாதாருக்கு (திராவிடருக்கு) எவ்வளவு எவ்வளவு கெடுதிகளையும், துரோகங்களையும் செய்து வந்திருக்கிறார்களென்பதை—செய்து வருகிறார்களென்பதைப் பொறுமையோடு படித்து அறியவேண்டுமாய்க் கோருகிறோம்.

முதலாவது பழைய காலத்திய தேசியவாதிகளில், சிறந்தவர்களில் தோழர் சர். சி. சங்கரன் நாயர் என்கிற திராவிடர் முக்கியமானவர் ஆவர். அவர் காங்கரசினும் தலைமை வகித்தார். அப்பேர்ப்பட்டவரை முன்னுக்கு வரவொட்டாமல் தடுப்பதற்காகப் பார்ப்பனர்கள் எவ்வளவோ சூழ்ச்சிகள் செய்துவந்தார்கள். அவருக்குக் கிடைக்கவிருந்த ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவியைக் கிடைக்கவொட்டாதபடிக்குச் செய்ய, எவ்விதப் பொதுநலத்திலும் ஈடுபட்டிராத தோழர் சர். வி. பாஷ்யம் அய்யங்கார் போன்றவர்களும் மற்றும் அநேக பார்ப்பன வக்கீல்களும் சீமைக்கெல்லாம் தந்தி கொடுத்ததோடல்லாமல், அவர்பேரில் எவ்வளவோ பழிகளையெல்லாம் சுமத்திக் கஷ்டப்படுத்தினார்கள். அதன் காரணமாக நான்கு, அய்ந்து வருடங்களுக்கு முன்னதாகவே கிடைக்கவேண்டிய ஹைக்கோர்ட் ஜட்ஜ் பதவி, வெகுகாலம் பொறுத்துத்தான் கிடைத்தது. டாக்டர் டி. எம். நாயர் அக்காலத்திய தேசியவாதிகளில் மிகவும் முக்கியமான பிரசித்த தேசியவாதி. அவர் எவ்வளவோ பொதுக் காரியங்களில் ஈடுபட்டிருந்தவர். அவரையும் மைலாப்பூர் பார்ப்பனர்கள் ஒரு முனிசிபாலிடியில்கூட அவர் உட்காருவதைப் பொறுக்காமல், அவருக்கு விரோதமாகச் சூழ்ச்சிகளைச் செய்து, அவரையும் உபத்திரவப்படுத்தினார்கள். ஜஸ்டிஸ் கட்சி ஏற்படுவதற்கு நமது நாட்டில் ஏற்பட்ட முக்கியமான காரணங்களில் இவையிரண்டும் முதன்மையானதென்று, ஒரு காங்கரஸ்ப்பார்ப்பனப் பிரசிடெண்டே நம்மிடம் சொல்லியிருக்கிறார். இவ்விதமான கஷ்டங்களிலிருந்து பார்ப்பனரல்லாதாரைக் காப்பாற்றுவதற்காக வேண்டி, முக்கிய காங்கரஸ்வாதிகளாயிருந்த டாக்டர், நாயர் போன்ற பார்ப்பனரல்லாத தலைவர்களால், ஜஸ்டிஸ் கட்சியென்று ஓர் ஸ்தாபனம் ஆரம்பிக்கப்பட்டது. அதை ஒழிப்பதற்காகப் பார்ப்பனர்கள் சூழ்ச்சி செய்து, அதற்கு, எதிரிடையாகப் பார்ப்பனரல்லாதார் சிலரைப் பிடித்தே "சென்னை மாகாணச் சங்கம்" என்று ஒன்றை ஆரம்பிக்கச் செய்து, அதற்கு வேண்டிய பொருளத்தனையும் பெரும் பான்மையாகப் பார்ப்பனரே உதவி "தேசபக்தன்" என்ற தமிழ்ச் தினசரிப் பத்திரிகையையும், "இந்தியன் பேட்ரியட்" என்ற ஆங்கிலத் தினசரிப் பத்திரிகையையும, ஜஸ்டிஸ் கட்சியைக் கொல்லுவதற்காகவே பிரச்சாரம் செய்யும் பொருட்டு, ஏற்பாடு செய்து கொடுத்து, ஜஸ்டிஸ் கட்சித் தலைவர்களுக்கும், ஜஸ்டிஸ் கட்சிக்கும் செல்வாக்கில்லாமல் அடித்தார்கள். "இந்தியன் பேட்ரியட்" பத்திரிகையைத் தங்கள் வேலையை முடித்துக் கொண்டவுடனே, ஒழித்து விட்டார்கள். எஞ்சியிருந்த "தேசபக்தன்" பத்திரிகையை, தேசத்தில் அதற்குக் கொஞ்சம் செல்வாக்கு ஆரம்பித்தவுடனே அதில் தமிழ்ப் பெரியார் கலியாணசுந்தரமுதலியார் ஆசிரியராயிருப்பதை ஒழிக்க வேண்டுமென்னும் முக்கிய கருத்துடன், அவருக்கு விரோதமாகச் சில பார்ப்பனரல்லாதாரையே கிளப்பிவிட்டு, சில பார்ப்பனர்களும் இரகசியமாக, அப்பத்திரிகைக்கு விரோதமாகத் தமிழ் நாட்டில் பிரச்சாரம் செய்து, தமிழ்ப் பெரியார் முதலி

யாரவர்களே 'தேசபக்தனை' விட்டு ஓடிப்போகும்படியாகச் செய்து விட்டார்கள். அதற்குப் பிறகு அப்பத்திரிகைக்குப் பார்ப்பனர்களே ஆசிரியர்களும், எஜமானர்களுமாகி மெதுவாக நழுவ விட்டுக் கொண்டார்கள். இதே மாதிரியே சென்னை மாகாண சங்கத்திலும், பார்ப்பனர்களின் சொற்படி நடந்து கொண்டிருந்த சிலர் ஆதிக்கம் பெற்றிருந்ததை ஆதாரமாக வைத்து, அவர்களைக் கொண்டே தங்கள் காரியமெல்லாம் முடிந்து போனவுடன் மறையும்படி செய்து விட்டார்கள்.

இவையெல்லாம் பழைய காங்கரஸின் கொள்கைப்படி ஏற்பட்ட திருவிளையாடல்கள் என்றாலும், ஒத்துழையாமை ஏற்பட்ட காலத்தில் பார்ப்பனரல்லாத திராவிடத் தேசபக்தர்களுக்குச் செய்த கொடுமைகளில் சில வற்றைக் கீழே குறிக்கிறோம்.

ஒத்துழையாமை ஆரம்பிப்பதற்குக் கொஞ்ச நாளைக்கு முன்பதாகச் சென்னையில் தேசீயவாதிகளின் சங்கம் (Nationalist's Association) என்று ஒன்றை ஆரம்பித்தார்கள். அதற்குத் தோழர் சி. விஜயராகவாச்சாரியார் அவர்களை அக்கிராசனராக வைத்து, உப அக்கிராசன ஸ்தானத்துக்குத் தோழர் வி. ஓ. சிதம்பரம்பிள்ளை அவர்கள் பெயரைப் பிரேரேபித்தவுடன், அவருக்கு அந்த ஸ்தானத்தைக் கொடுக்க இஷ்டமில்லாதவர்களாகி, அதை அவர் அடையவிடாமற் செய்வதற்கு எவ்வளவோ பிரயத்தனங்களைப் பார்ப்பனர்கள் செய்தார்கள். இதைப் பார்ப்பனரல்லாதவர்களில் சிலர் தெரிந்து, அப்போதே கூச்சல் போட்டதின்பலனாக, அநேக உப அக்ராசனாதிபதிகளை ஏற்பாடு செய்து, அந்த ஸ்தானத்திற்கே ஒரு மதிப்பில்லாமல் அடிக்கப்பார்த்தார்கள். இதன் பலனாக அதன் நிர்வாகசபைகளில் பார்ப்பனரல்லாதாரை அதிகமாகப் போடும்படி நேரிட்டது. இதன் காரணமாகத் தேசீயவாதிகளின் சங்கமென்பதைக் குழந்தைப் பருவத்திலேயே கழுத்தைத்திருகிக் கொன்றுபோட்டார்கள். பிறகு திருப்பூரில் கூடிய தமிழ்நாடு மாகாண மாநாட்டுக்குத் தோழர் வரதராஜுலு நாயுடு அவர்களைத் தலைமை வகிக்க வேண்டுமென்று சிலர் பிரரேபித்தார்கள். அதற்கு விரோதமாக இந்து, சுதேசமித்திரன், சுயராஜ்யா ஆகிய மூன்று பத்திரிகைகளும், அது சமயம் நாயுடு அவர்கள் மாநாட்டில் தலைமை வகிக்கத் தகுதியற்றவர் என்று எழுதி வந்ததோடு, பிரரேபித்தவரும் இம்மாதிரி பிரரேபித்தது தப்பிதமென்று சொல்லியும், அநேக ஜில்லாக்கள் பெரும்பான்மையாய்த் தோழர் வரதராஜுலு நாயுடுவையே தெரிந்தெடுத்திருந்தும், தோழர் ஆதிநாராயண செட்டியாரவர்களைக் கொண்டும், தோழர் ஏ. ரெங்கசாமி அய்யங்கார் திருப்பூருக்குச் சென்றதின் பலனாயும், உபசாரணைக் கமிட்டியாரை வசப்படுத்தி, இவருடைய தேர்தலை ஒப்புக்கொள்ளாமல் நிராகரிக்கும்படி செய்துவிட்டார்கள். பிறகு மாகாணக் காங்கரஸ் கமிட்டியார் பிரவேசித்து அவரை ஒப்புக்கொள்ள வேண்டுமென்று, தங்களுடைய அதிகாரத்தைக் கொண்டு நிர்ப்பந்தப்படுத்தினதின் பேரில் சுயமரியாதையுள்ளவர்கள் ஒப்புக்கொள்ள முடியாதவாறு உள்ள ஓர் தீர்மானத்தைப் போட்டு அவரையே ஒப்புக்கொண்ட மாதிரியாய்த் தெரியப்படுத்தினார்கள். இத் தீர்மானத்தின் போக்கு யோக்கியதை அற்றதாய் இருந்தபடியால் தோழர் நாயுடு அதைத் தமக்கு வேண்டாமென நிராகரிக்கும்படியாயிற்று. பிறகு திடீரென்று தோழர் எம்.ஜி. வாசுதேவ அய்யரவர்களைக் கொண்டு அம் மாநாட்டை நடத்திக்கொண்டார்கள்.

அதற்கடுத்தாற்போல் தமிழ்நாடு காங்கரஸ் கமிட்டிக்கு அக்கிராசனாதிபதியாகப் பெரும்பான்மையோரால் என்னைத் தேர்ந்தெடுக்கப்பட்டபோது, தெரிந்தெடுத்த ஒரு மணி நேரத்திற்குள், தோழர் வ. வே. சு. அய்யர் அவர்கள், நம்பிக்கையில்லை எனும் தீர்மானம் கொண்டு வந்தார்கள். அந்தச் சமயத்தில் தமிழ்ப் பெரியார் கலியாணசுந்தர முதலியார் எழுந்து, இது ராஜீய நோக்கத்துடன் கொண்டுவந்த தீர்மானமல்ல என்றும், அது ஒரு பார்ப்பனரல்லாதார் இந்த ஸ்தானம் பெறுவதை எப்படியாவது ஒழிக்க வேண்டும் என்கிற வகுப்புத் துவேஷத்தின் மேல் கொண்டுவந்ததென்றும் பொருள்பட உக்கிரமாய் அப்பொழுதே பேசி இருக்கிறார்.

இத்தீர்மானம் தோழர் வ. வே. சு. அய்யர் கொண்டு வந்ததின் பலனாய் சில நாட்களுக்குள் தோழர் எஸ். சீனிவாச அய்யங்காரால் ஷை அய்யர் அவர்களுக்குக் குருகுலத்திற்கென்று ரூ. 500 நன்கொடை அளிக்கப்பட்டது.

1926ல் காஞ்சிபுரத்தில் நடந்த தமிழ் மாகாண மாநாட்டிற்குத் தமிழ்ப் பெரியாரை சில ஜில்லாக் கமிட்டிகள் தெரிந்தெடுத்திருந்தும், அதை வெளியாருக்குத் தெரிவிக்காமல் இரகசியமாய் வைத்துக் கொண்டு, தங்களுக்கு வேண்டியவர்களுக்கு ஆகும்படி இரகசியப் பிரச்சாரங்களும் நடைபெற்றன. இதற்கு முன்னெல்லாம் யார் யாரை எந்தெந்த ஜில்லாக்கள் தெரிந்தெடுத்தன என்பது பத்திரிகைகளில் வருவது வழக்கம். அப்பொழுது உபசாரணைக் கமிட்டியாரும் தெரிவிக்காமல் பத்திரிகைக்காரர்களும் தெரிவிக்காமல் இரகசியமாய் வைக்கப்பட்டது. தவிர, கும்பகோணம் காங்கரஸ் கமிட்டி, தோழர் வரதராஜுலு நாயுடு தமது காங்கரஸ் கமிட்டித் தலைவர் பதவியை ராஜினாமாச் செய்யவேண்டுமென்று தீர்மானம் ஒன்று செய்தது. சென்னைக் காங்கரஸ் கமிட்டியோ, என்னையும் சுரேந்திரனாத் ஆரியாவையும் கண்டித்து ஒரு தீர்மானம் செய்தது. நன்னிலம் பொதுக்கூட்டத்தில் என்னையும், தமிழ்ப் பெரியார், ஆரியா ஆகியோரையும் காங்கரஸினின்று வெளியாக்க வேண்டுமெனத் தோழர் சீனுவாச அய்யங்கார் பேசினார். சட்டசபையில் காங்கரஸ்பார்ப்பனமெம்பருடைய வேலை, பார்ப்பனரல்லாதாருடைய ஆதிக்கத்தை ஒழிக்க வேண்டுமென்பதும், பார்ப்பனரல்லாதாருக்கு எதிரிடையாய் நிற்க வேண்டுமென்பதுமே என்று, சட்டசபையில் எலெக்ஷன் ஆன உடனேயே சுதேசமித்திரன் பத்திரிகை எழுதியது. இந்த நேரத்தில் சட்டசபையில் ஒரு பார்ப்பனர், எங்களுக்கு உத்தியோகம் கொடுக்காவிட்டால், ஒத்துழையாமைக் கட்சியில் சேர்ந்துவிடுவோமென சர்க்காரை மிரட்டினார். அன்றி, வைக்கம் சத்தி

(தொடர்ச்சி 14ம் பக்கம்)

20 ஆண்டுகளுக்குமுன் பெரியார்.

# மெட்டிரியலிஸம்.

☆

## "நான்"

இப்போது மனிதன் தன்னை உணர்த்தும் வகையில் "நான்" என்று சொல்லிக்கொள்வது எது என்பதே இப்போது இவ்வத்தியாயத்தில் விளக்கப்படவேண்டிய விஷயமாகும். முன் அத்தியாயத்தில் ஆத்மா என்பதைப் பற்றிச் சொன்னதுபோலவேதான் இப்போது "நான்" என்பதைப்பற்றியும் சொல்லவேண்டியிருக்கின்றது.

மனிதன் தன்னை நான் என்று சொல்லிக்கொள்வது எதனால்? அது எது? என்னும் ஆராய்ச்சியானது இந்து மதம் என்பதின் கடைசி—அதாவது "வேதாந்த," தத்துவமாகப் பாவிக்கப்பட்டு "அதைக் கண்டுபிடிப்பதே" கடவுளைக் கண்டுபிடிப்பதாகும்" என்று சொல்லப்பட்டிருக்கின்றது.

உதாரணமாக "தன்னை அறிந்தவனே தலைவனை (கடவுளை) அறிந்தவனாவான்" என்றும், "தன்னைத்தான் அறிந்தால் கடவுளை அறியவேண்டியதில்லை" "தன்னையறிந்தவனே ஞானி" என்றெல்லாம் சொல்லப்படுவதை நாம் கேட்டிருக்கிறோம்.

ஆகவே இந்தப்படி சொன்னவர்கள் எல்லாம் ஒரு மனிதன் தன்னை "நான்" என்று சொல்லிக்கொள்கின்றானே அது எது? என்று கண்டுபிடிக்கும் விஷயத்தில் ஏதோ ஒரு பெரிய கஷ்டம் இருப்பதாக நினைத்தோ, அது சுலபத்தில் மனத்துக் கெட்டாதது என்று கருதியோ இப்படிச் சொல்லியிருக்கக்கூடும் என்பதாகவும், மற்றும் "நான்" என்பதைக் கண்டுபிடிக்க முயற்சி செய்து ஒருவன் அதைக் கண்டுபிடித்து விட்டானேயானால் பிறகு அவன் "ஞானியாகவும்" "துறவியாகவும்" அல்லது கடவுளைப்பற்றிக் கவலைப்பட வேண்டியவனல்லாத—லட்சியம் செய்யப்பட வேண்டியவனல்லாத "நாஸ்தீகனாகவும்" ஆகிவிடக்கூடும் என்று கருதிச் சொன்னதாகவும் இருக்கக்கூடும் என்பதாக முடிவு செய்து கொள்ளவேண்டியிருக்கின்றது.

எப்படியிருந்தாலும் ஒரு மனிதன், தான் யார்? தனக்குள் இருக்கும் நான்—என்—என்று வரும் உணர்ச்சி எது? அது எப்படி உண்டாகின்றது? எதுவரையில் அவ்வுணர்ச்சி இருக்கின்றது? என்பதான உண்மையை உணர்ந்தால், அவன் நாஸ்தீக அபிப்பிராயத்தை —அதாவது ஆத்மாவோ, கடவுளோ இருக்கின்றது என்பதை நம்பாத கொள்கையையே கொள்ள வேண்டியவனாகி விடுவான் என்று சொல்லப்படுவதில் உண்மை உண்டு என்பதை ஒப்புக்கொள்ளுகின்றோம்.

உலகத்தில் பெயரும்—உருவமும் உள்ள வஸ்துக்கள் எல்லாம், ஒருவிதச் சேர்க்கையால் அதாவது பல கூட்டுப் பொருள்களால் சேர்ந்து இருக்கும் வடிவத்தையே பெரிதும் உணர்த்துவதாகும்.

ஏனெனில் உலகத்திலுள்ள எந்தப் பெயருக்கும் மாறுதலையடையாத ஒரு தனி வஸ்து என்பது கிடையவே கிடையாது என்பதை ஞாபகத்தில் வைத்துக் கொள்ள வேண்டும். ஏனெனில் எந்தப் பெயரும் ஒரு தோற்றத்திற்கு அல்லது ஒரு உருவத்திற்கு அல்லது ஒரு வடிவத்திற்குத்தான் உபயோகப்பட்டு—சொல்லப்பட்டு வருகின்றதே அல்லாமல் வஸ்துவுக்குப் பெயர் சொல்லப்படுவதில்லை என்பதேயாகும்.

உதாரணமாக நாம் ஏதாவது ஒரு வஸ்து என்பதை எடுத்துக் கொண்டு அதற்குப்பெயர் என்ன? என்று ஒரு மனிதனைக் கேட்டு, அவன் சொன்ன பெயரையே திருப்பிச் சொல்லி, அந்தப் பெயருக்குண்டான வஸ்துவைத் தொட்டுக்காட்டும்படி அம்மனிதனையே கேட்டால், அந்த மனிதன் தொட்டுக்காட்டும் பாகத்தில் இருக்கும் வஸ்துவானது அந்தப் பெயரை—அதாவது அவன்முன் சொன்ன பெயரை உடையதாக அது காணப்படாததை நாம் நன்றாய்ப் பார்க்கலாம். அதாவது,

ஒரு விளக்கு (light)—ஒரு மேஜை—ஒரு கடிகாரம்—ஒரு புஸ்தகம் என்பது போன்ற பெயர்களை உடைய வஸ்துக்கள் என்பவைகளில், ஏதாவது ஒன்றை எடுத்துக்கொண்டு அவற்றின் பெயர் என்னஎன்று கேட்டால், முறையே முன்சொன்ன பெயர்களைத்தான் சொல்லுவான்.

ஆனால் ஒரு விளக்கு என்பது எது என்று தொட்டுக் காட்டச் சொன்னால், விளக்கு என்பதில் அவன் தொட்டுக்காட்டிய பாகம் ஒரு சிம்னியையோ, கண்ணாடியையோ, தகட்டையோ, கம்பியையோ, ஆணியையோதான் தொட்டுக்காட்டப்பட்டதாகக் காணப்படும்.

அதுபோலவே ஒரு மேஜையைத் தொட்டுக்காட்டச் சொன்னால் ஒரு பலகையையோ, அல்லது காலையோ, ஆணியையோ, குமிழையோ, கைப்பிடியையோதான் தொட்டுக் காட்டியதாய்க் காணப்படும்.

அதுபோலவே ஒரு கடிகாரம் என்பதையும் தொட்டுக்காட்டச் சொன்னால் அவன் மேல் மூடியையோ, கண்ணாடியையோ அல்லது திறந்த கடிகாரமாய் இருந்தால், ஒரு சக்கரம் என்பதையோ, ஆணி என்பதையோ, தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும்.

அதுபோலவே ஒரு புஸ்தகம் என்பதையும் தொட்டுக் காட்டச் சொன்னால் அவன் தொட்டுக் காட்டிய பாகம் காகிதமாகவோ, அட்டையாகவோ, காலிகோ துணியாகவோ, தோலாகவோ தான் காணப்படும்.

இப்படியே மற்றும் அதன் உட்பிரிவுப் பெயர்களும் அதாவது

...ச் சொல்லப்பட்ட பெயராகவும் சரியான ஒன்றைத் தொட்டுக் காட்டப்பட்டதாகவும் இருக்க முடியாது. ஏனெனில் அவன் விளக்கு (Light) என்பதாகக் காட்டியது கம்பி என்பதானாலும், கம்பி என்பதாக ஒன்றைத்தொட்டுக்காட்டியதாக இல்லாமல் இரும்பைத் தொட்டுக் காட்டியதாகத்தான் காணப்படும். இரும்பு என்பதைக் காட்டும்போது ஏதோ ஒருவகையான மண்ணின் சேர்க்கையைக் காட்டியதாகத்தான் காணப்படும். இப்படியே நமக்குக் காணப்படும் வஸ்துக்கள் எல்லாம் ஏதோ ஒரு ரூபமாத்திரத்திற்கு—ஒரு உருவத்திற்கு—ஒரு மாதிரியான தோற்றத்திற்கு—அந்தப் பெயர் சொல்லப்படுவதாகக் காணப்படுமேயன்றி அந்தப் பெயருக்கு அந்த வஸ்து கட்டுப்பட்டு அந்த வஸ்துக்கள், வேறெந்த ரூபத்தை அடைந்தாலும், வேறெந்தக் குணத்தை அடைந்தாலும் அந்தப் பெயரையேயுடையதாகக் காணும்படியான ஒரு வஸ்துவும் காணப்பட முடியாது என்பது இவற்றிலிருந்து நன்றாய் உணரக்கிடக்கின்றது.

ஆகவே விளக்கு என்றதும், மற்றும் மேஜை, கடிகாரம், புத்தகம் என்றதும் ஒருவித வடிவத்தில் காணப்படும் ஒரு தோற்றத்தின் பெயரே அல்லாமல், ஒரு வஸ்துவின் பெயர் அல்ல என்பதும் இதனால் உணரத்தகுந்ததாகும்.

எனவே இவை போன்ற இன்னும் பல கேள்விகளும் சந்தேகங்களும் ஒருபக்கமிருக்க, மனிதன் என்றால் என்ன? என்பதையே நாம் இங்கு முதலில் ஆராய்வோம். மனிதன் என்பதின் தன்மை விளக்கம் ஆங்கிலத்தில் Self என்பதான தான், நான், என், என்கின்ற குறிப்பு உணர்ச்சிகளேயாகும். அக் குறிப்புகளில் ஒரு மனிதன் தன்னை நான் என்று சொல்லிக் கொள்ளும்போதும் எனக்கு, என்னுடையது என்று சொல்லிக் கொள்ளும்போதும் ஏற்படுகின்ற உணர்ச்சி எப்படிப்பட்டது? அது எப்படி உண்டாகிறது? என்பதைக் கவனித்தால் ஆத்மாவின் தன்மை தானாகவே விளங்கும்.

அதாவது, ஒரு மனிதன் நான் என்பதில் அந்த மனித சரீரத்தின் எந்தப் பாகம் தனித்திருந்து நான் என்கின்றது? அல்லது அந்த சரீரம் மொத்தமுமா? அல்லது சரீரமில்லாமலா? சரீரத்தில் எதுவரை நான் என்ற உணர்ச்சி இருக்கின்றது? சரீரத்தில் இருந்து எது போய்விட்டால் நான் என்கின்றது போய்விடுகின்றது? என்பது போன்ற கேள்விகளுக்குச் சமாதானம் கிடைத்தாலொழிய "நான்" என்பது விளங்காது.

இந்த முறையில் நான் என்பதைக் கவனிக்கும்போது என் சரீரம், என் உயிர், என் ஆத்மா, என் ஆவி, என் ஜீவன், என் மனம், என் அறிவு, என் புத்தி, என் எண்ணம், என் சித்தம், என் பிராணன், என் பிராணவாயு, என் சூட்சம சக்தி, என் கடவுள், என் ஆண்டவன் என்பனபோன்ற—அதாவது மனிதன் அல்லது ஆத்மா—அல்லது ஜீவன் என்பவைகளாகிய எதைதை நாம் மனிதனாக ஆத்மாவாக இருக்கக்கூடும் என்று கருதுகின்றோமோ, அவைகளையெல்லாம் தன்னில் இருந்து தனிப்படுத்தி, அவைகளோடு என் என்பதைச் சேர்த்துப் பேசுவதைப் பார்க்கின்றோம். ஆகவே என் (நான்) வேறு, மேற்கண்ட மற்றவைகள் எல்லாம் வேறு என்பதாக நினைக்கும்படியாக இருக்கின்றது. ஆதலால் இவைகள் எல்லாம் மனிதனுடைய தன்மை, உணர்ச்சி ஆகிய "நான்" என்பது அல்ல என்றே சொல்லவேண்டியிருக்கிறது.

இந்த நிலையில் மனிதனாகிய "நான்" என்னும் தன்மை உணர்ச்சி செய்த காரியங்களுக்காக, நான் அல்லாத அதாவது என் ஆத்மா என்பதாகிய ஒரு வஸ்துவோ ஒரு ஜீவனோ ஒரு சக்தியோ ஆகிய சூட்சம ஜீவன் என்பது எப்படி அந்தப் பயனை அனுபவிக்க முடியும்? அனுபவிப்பது தான் எப்படி நியாயமாகும்? நான் செய்தகாரியத்திற்கு என் ஆத்மாவைத் தண்டிப்பதோ, கண்டிப்பதோ, சன்மானம் ஆகியவைகளைக் கொடுப்பதோ எப்படிக் கடவுளின் நீதியாகும்? என்கின்றதான விஷயம் மிகவும் யோசிக்கத்தக்கதாகும்.

இந்தமாதிரியான பிரச்சினைகளுக்குச் சமாதானம் சொல்லுபவர்கள், பெரிதும் ஒரேசமாதானம் தான் சொல்லுவார்கள். அதென்னவென்றால் "இம்மாதிரியான, பிரச்சினை ... ஆயிரம் வருஷங்களுக்கு மு... மேயே பலரால் கேட்கப்பட்... விட்டது; இவை சாதாரண மனி... தர்களுக்குப் புரியும்படியானவை... கள் அல்ல; சொன்னாலும் உங்... ளைப்போன்றவர்களால் கிரகி... துக்கொள்ள முடியாது; வேண்... மானால் கைவல்யம், ஞான... வெட்டி, வாசிஷ்டம், கீதை... வேதாந்தசாரம், தத்துவகீதை... முதலாகியவைகளைப் பாருங்கள்... அதற்கு வேறு பல பக்குவங்கள்... வேண்டும், என்பது போன்ற ப... லைச் சொல்லிவிடுவார்கள்.

சாதாரணமாக கிறிஸ்தவ... களும், இஸ்லாமானவர்களும் அனேகர் இந்த விஷயத்தில் கவ... லைப்படாமல் 'தீர்ப்புநாளை' உத்... தேசித்து, தாங்கள் இந்த சரீர... துடனேயே ஒரு காலத்தில் மறு... படியும் எழுப்பப்பட்டு ஏதோ ஒரு... பலனை அடையக்கூடும் என்கின்... அளவோடு விட்டு விட்டார்கள்... ஆதலால் அவர்களிடம் அதிகச்... சிக்கலோ, புரட்டோ கிடையாது... பௌத்தர்கள் "ஆத்மா என்பதே... கிடையாது; நித்திய வஸ்து என்... பதே கிடையாது" என்பதாக... முடிவு கட்டிவிட்டார்கள். ஆதலால் அவர்களுக்குள்ளும் இம்மாதிரி... யான கொசமுசாக்கள் கிடையாது...

ஆனால் இந்து மதக்காரர்கள் என்பவர்கள் மாத்திரம் ஆத்மா... சூட்சம சரீரம், மோட்ச லோகம், நரகலோகம், மறுபிறப்பு, அதுவும் பலவிதமாய்—அதாவது 'புல்லா... கிப்பூண்டாகி' என்று படிப்படி... யாய் ஏற்பட்டது என்றும், இவை... கள் எல்லாவற்றையும்விட மற்... றொரு விதமாய் அதாவது ஆத்... மாக்கள் பிதுர்த்தேவதைகளாகப் பிதுர் லோகம் என்பதில் இருந்து... கொண்டு பிள்ளைகள், சந்ததியார்... கள் முதலியவர்களால் இந்த உல... கத்தில் பிராமணாளுக்குக் கொடுக்... கப்படுவதை அவர்களது மந்திர... சக்தியின் மூலமாய்ப்பெற்று... வாழ்ந்து வருகின்றார்கள் என்றும் இன்னும் பலவிதமாய்ச்சொல்லப்... படுகின்றன. ஆகவே இவை தானா... கவே ஒன்றுக்கொன்று முரண்... பாடுள்ள கட்டுக்கதைகளாய்த்... தென்படுகின்றன.

# காமன்வெல்த் உறவின் கேலிக்கூத்து!

## அந்தோ! இந்த நிலையா?

## ஈரோட்டில் பெரியார் பேச்சு.

7—5—49 அன்று மாலை ஈரோட்டில் தோழர் எஸ். ஆர். சந்தானம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் தலைவர் பெரியார் அவர்கள் ஆற்றிய சொற்பொழிவு:

தலைவரவர்களே! தோழர்களே!

இன்று இங்கு கூட்டப்பட்டுள்ள இக்கூட்டம் திராவிடர் கழக ஆதரவில் நடைபெறுவதாகும். திராவிடர் இயக்க சம்பந்தமான நடவடிக்கைகள், மற்ற எல்லா இடங்களையும்விட் ஈரோட்டில்தான் மிகவும் பின்னணியில் இருந்து வருகிறது. காரணம் மக்களிடையே உணர்ச்சியில்லையென்பதல்ல, இவ்வூரின் சூழ்நிலை அவ்வாறிருக்கிறது.

### ஈரோட்டு நிலை.

இந்த ஊரிலிருந்து வெளியூர்களுக்குச் செல்லும் வியாபாரிகளையோ, அல்லது மற்றவர்களையோ அங்குள்ளவர்கள், நீங்கள்எந்தஊர்? என்று கேட்க, இவர்கள் ஈரோடு எங்கள் சொந்த ஊர் என்று பதில் கூறும்போது, "நீங்கள் மிகவும் பாக்கியசாலிகள்தான், ராமசாமி நாயக்கர் உங்கள் ஊர்க்காரர் என்பதில் உங்களுக்குப் பெருமைதான்" என்று கூறுவார்களாம். ஆனால் அதற்கு நம்ம ஊர்க்காரர்கள் என்ன கூறுவார்கள் தெரியுமோ? "அட! நீங்கள்தானய்யா அவரைப் பிரமாதமாகக் கொண்டாடுகிறீர்கள், எங்கள் ஊரில் யாருமே லட்சியம் செய்வதில்லை அவரை, அவருக்குமதிப்பே கிடையாது" என்று கூறுவார்களாம். அதற்கு, வெளியூர்த்தோழர்கள் இவர்களைப் பார்த்து, அப்படியானால் நீங்கள் மகா புத்திசாலிகள்தான் என்று பதில் சொல்வார்களாம். கோவை ஜில்லா மாற்றுக்கட்சி முக்கியஸ்தர் ஒருவரே, என்னைப்பற்றி இவ்வாறு வெளியூர்க் கூட்டமொன்றில் கூறினாராம்.

உள்ளூரில் என்னை மதிக்கும் அளவுக்கு நானில்லை யென்பது வாஸ்தவந்தான். அதைப்பொறுத்துத்தானே கழக வேலையும் இங்கு இருக்கும்.

இன்றுகூட இக்கூட்டத்தில் அரசியல் நிலைபற்றிப் பேசவேண்டும்என்று குறிப்பிட்டார்கள். எனக்கு முன்னால் பேசிய நண்பர்களும் அரசியலைப்பற்றியும் பேசினார்கள். ஆனால் நான் அரசியலைப்பற்றி இந்த ஊரில் பேச இஷ்டப்படவில்லை. காரணம்அதைப் புரிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவர்கள் இவ்வூரில் மிகமிகச் சொற்பம்! இந்த ஊரில் பெரும்பாலும் எல்லாம் வியாபாரிகள். அவர்களுக்கு அடிக்கடி ஆண்டவனிடம் மன்னிப்புக்கேட்கவும், அதற்கான பூஜை திருவிழா செய்யவுமே காலமெல்லாம் சரியாய் விடுகிறது. அதுவும் கள்ள மார்க்கெட் வியாபாரிகள் தினமும் ஆண்டவனிடம் பேசுவதையே பெரும்பணியாகக் கொண்டு விட்டனர். இவர்களுக்கு அரசியலைப்பற்றிக் கவலை என்ன இருக்கப்போகிறது? அரசியல் என்றால் என்ன என்றாவது தெரிய முடியுமா? ஒரு சிலருக்காவது அவ்வித ஆற்றல் இருக்கிறதென்றால், இப்பேர்ப்பட்ட வியாபாரிகளிடம் வேலை செய்து வயிறு வளர்க்க வேண்டிய காரணத்தினால், அவர்களும் அதிகமாகப் பொதுக் காரியங்களில் ஈடுபட முடிவதில்லை. எனவேதான் இவ்வூரில் திராவிடர் கழக வேலை அவ்வளவு ஆமைவேகத்திலிருப்பதும், என்னைப்பற்றி மதிப்பில்லை யென்று கூறுவதற்கும் காரணமாகும்.

ஆகவே அரசியலைப்பற்றியே தெரியாத, பேசினாலும் புரிந்து கொள்ள முடியாதவர்கள் பெரும்பான்மையாயுள்ள இக்கூட்டத்திலே, நான்அதைப் பற்றிப் பேசாமல், மக்களின் உண்மையான விடுதலைக்கு ஏற்ற சமுதாயத்தைப்பற்றிப் பேசலாமென்று எண்ணுகிறேன்.

நான் பல ஊர்களில் சுற்றிப் பிரசாரம் செய்து வருகிறேன் என்றால் எல்லா இடங்களிலும் ஒரே பேச்சுப் பேசுவதுகிடையாது. சற்று பக்குவமடைந்த, கழகக்கொள்கையில் மிகவும் ஆர்வமுடைய, அல்லது பொது அறிவு படைத்தவர்கள் மிகுதியாக உள்ள ஊர்களில், அரசியலை சற்றுகுறிப்பிடுவது வழக்கம். ஈரோடு போன்ற ஊர்களானால் அதற்கேற்ற பேச்சாகவேதான் பேசுவேன்.

இன்னும் கூறவேண்டுமானால் அரசியலைப்பற்றித்தான் இன்று என்ன வாழ்கிறது? அரசியலை எவ்வளவு இழி தன்மைக்குக் கொண்டுவர வேண்டுமோ அந்த நிலைக்குக் காங்கரஸ் கொண்டு வந்து விட்டது!

### அரசியல் போட்டிக்காரர்கள் அல்ல.

நாங்கள் அரசியலில் போட்டி போடப் போவதில்லை என்று எத்தனை தரம்தான் கூறினாலும் நமது காங்கரஸ்காரர்களுக்குப் புரிவதில்லை. இன்று நேற்றல்ல, நான் இவ்வாறுசொல்வது. நான் ஜஸ்டிஸ் கட்சிக்கு என்று தலைவனாய் வந்தேனோ, அன்று முதலே மந்திரி பதவி வகிப்பதற்கு எதிர்ப்பாயிருந்து வந்திருக்கிறேன்.

ஆனால் நீங்கள் கேட்கலாம்; என்னையா! நீங்களே உங்களைப்பற்றிப் பெருமையாகப் புகழ்ந்து கொள்கிறீர்களே; உங்களுக்குப் பதவி கொடுக்க யார் அழைத்தார்கள்; வேண்டினார்கள் என்பதாக.

தோழர்களே கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்கள் தமது மந்திரிசபையை ராஜிநாமா செய்துவிட்டு வீடு போய்ச்சேர்வதற்கு முன்னமேயே கவர்னர் ஜஸ்டிஸ் கட்சியினரைமந்திரிசபை ஏற்படுத்தும்படி வற்புறுத்தி அழைத்ததை உங்களுக்கு நினைவூட்டுகிறேன்.

அப்பொழுது உதகையிலே இருந்த கவர்னர், நமது காலஞ்சென்ற பன்னீர்செல்வம் அவர்களைக் கூப்பிட்டு உங்கள் கட்சித் தலைவருக்கு ஆங்கிலம் நன்றாகப் பேசவும் எழுதவும் தெரியுமா? என்று கேட்டாராம். அதற்குச் செல்வம் அவர்கள் கவர்னரை நோக்கி ஏன் இவ்வாறு கேட்கிறீர்கள் என்று வினவ, அடுத்த மந்திரிசபை உங்கள் கட்சியார்தான் நிறுவவேண்டியிருக்கும், அப்போது கட்சித் தலைவர் தானே பிரதமராயிருக்கவேண்டும்! அதற்காகத்தான் கேட்டேன் என்றாராம்.

அவருக்கு ஆங்கிலம் தெரிகிறதோ இல்லையோ முதலாவதாக அவர் பதவியை ஒப்புக்கொள்கிறாரா இல்லையா என்பதை அறிந்துகொள்ள வேண்டுமென்று செல்வம் அவர்கள் கூறினாராம். நீங்கள் சட்ட வரம்புக்கு உட்பட்டு இயக்கத்தை நடத்துபவர்கள்தானே, பதவி வகிப்பதில் என்ன தவறு இருக்கிறதுஎன்று கேட்டாராம், கவர்னர். எப்படியிருந்தாலும் பதவியேற்கும் விஷயம்மட்டும் கட்சித் தலைவரைக் கலக்காமல் கூறமுடியாது என்று அவர் கூறினாராம்.

பிறகு என்னிடம் கவர்னர் கூறிய

தைச்செல்வம் கூறிவிட்டார் என்பதை அறிந்தகட்சிப் பிரமுகர்களும்எனக்குக் கூறியதுடன் பதவியையும் ஒப்புக் கொள்ளலாமென்று ஜாடையாகக்குறிப்பிட்டனர். நான்பதவியேற்றுக்கொள்வதென்பது முடியாது என்று அவர்களிடம் கூறியதோடல்லாமல், அடுத்து சென்னையில் ராஜா சர். முத்தையா செட்டியார் அவர்கள் அரண்மனையில் 1939-ல் கட்சியின் நிர்வாகக் கமிட்டியையும் கூட்டி, மந்திரிபதவியேற்பது கூடாது என்று தீர்மானம் நிறைவேற்றினேன்.

## எளிதல்ல.

ஆனாலும் அக் கூட்டத்தில் தீர்மானம் சுலபமாக நிறைவேறிற்றென்று நினைக்கிறீர்களா? அன்று நிர்வாகக் கமிட்டியிலிருந்த பெரிய பெரிய சீமான்கள், ஜமீன்தாரர்கள் எல்லாம் எதிர்த்தார்கள். எனது கருத்திற்கு ஆதரவாக ஒரு சில சாதாரணத் தோழர்கள்தான் இருந்தார்கள். ஓட்டுக்கு விட்டிருந்தால் பதவியேற்புக்கு ஆதரவாக பெருவாரியாக ஓட் கிடைத்திருக்கும்.

எனினும் கட்சித் தலைவன் என்ற முறையில் நானே தீர்மானத்தைப் பிரேரேபித்தேன். இதைக் கண்டதும் அவர்கள் விழிக்கலானார்கள். நமது பன்னீர்செல்வத்தை எழுந்து பேசமாறு பதவி ஆதரிப்பாளர்கள் செய்தனர். நான் பன்னீர்ச்செல்வம் அவர்களையும் இனி பேசுவதற்கு இடமில்லை, தயவுசெய்து உட்காருங்கள், என்று கூறிவிட்டேன். பிறகு எனக்கு வேண்டியவரான அதாவது அவர் சொல்லைத் தட்டமாட்டேன் என்ற பாத்தியதையுடைய நண்பர் சவுந்தரபாண்டியன் அவர்களை விட்டுப் பேசச்சொன்னார்கள். அவரும் எழுந்து ஏதோ பேச வாயெடுத்தார். தாங்களும் ஒன்றும் பேசவேண்டிய அவசியமில்லை என்றேன். அதற்குப் பாண்டியன் 'இப்படிநீங்கள் கூறக்கூடாது, தயவுசெய்து என் வார்த்தையைக் கேளுங்கள்' என்றார்.

தங்களிடமும் அவ்விதம் கூறும் அளவுக்கு நிலைமை ஏற்பட்டுவிட்டது பற்றி வருந்துகிறேன். தயவுசெய்து உட்காருங்கள் என்றேன். அவரும் உட்கார்ந்துவிட்டார். இவர்களிரண்டு பேருடைய முயற்சியும் தோல்வியுறவே பதவி ஆதரிப்பாளர்கள் ஒருவர் முகத்தை ஒருவர் பார்ப்பதும் விழிப்பதுமாயிருந்தார்கள்.

உடனே ஓட்டுக்குவிட்டேன். ஏதோ என் சொந்தத் தாட்சண்யத்துக்காகச் சிலர் கையைப் பாதி உயர்த்துவதும் பாதி கீழேவிடுவதுமாய் இருந்தார்கள் என்றாலும், நான் துணியை மேலே உதறிப் போட்டுக் கொண்டு போவதைக் கண்ட அவர்கள் கடைசியிலே தீர்மானத்தை நிறைவேற்றித்தந்தார்கள். உடனே ஒன்றும்பேசாமல் புறப்பட்டுவிட்டேன். ஏன் அப்படி வந்துவிட்டேன் என்றால் பதவிஏற்பை எவ்விதத்திலும் ஒப்புக் கொள்ளச் செய்துவிடலாம் என்று மிக முன்னெச்சரிக்கையான காரியங்களை நடத்தி ஏமாந்த தோழர்களின் முகத்தைப் பார்க்க எனக்கே பரிதாபமாயிருந்தது.

## தேர்தலும் கூடாது.

தோழர்களே, இப்படி மந்திரிசபையை ஏற்க மறுத்ததுமட்டுமல்ல, பின் சட்டசபை தேர்தலுக்கு நிற்பதும் கூடாதென்று சேலம் மாநாட்டிலே தீர்மானித்துள்ளோம்.

இதை ஏன் கூறுகிறேன் என்றால், நாங்கள் அரசியல் வேலையில் ஈடுபட்டிருக்க வில்லையென்பதுடன் காங்கரஸ்காரருக்கு அரசியல் விரோதிகளாகவுமில்லை யென்பதை விளக்கவேயாகும்.

அதுமட்டுமல்ல, காங்கரஸ் உங்களிடம் ஓட்டுக் கேட்டபோது, என்னென்ன கூறினார்கள்? இன்று நீங்கள் எவ்வளவு கஷ்டப்படுகிறீர்கள்? ஓட்டு வாங்கிய சட்டசபை மெம்பர்களை நீங்கள் அணுகிக் கேட்டால் நியாயமான பதில்வருகிறதா? அன்று அவ்வாறு கூறினீர்களே இன்று இப்படி நடக்கின்றீர்களே யென்றால்; நான் ஓட்டு பெறுவதற்காகச்சொல்வேனேன், உனக்குப் புத்தியெங்கே போயிற்றுஎன்றுதான் கூறுவாரேயன்றி நாணயமான தன்மையுடன் தங்களின் தவறுதலுக்கு வருத்தப்படும் சட்டசபை உறுப்பினரை விரல் விட்டு எண்ணமுடியுமா? சட்டசபை உறுப்பினர்தான் அவ்வாறிருந்தாலும், மந்திரிகளாவது ஒழுங்காகப் பதில் கூறுகிறார்களா? ஓட்டர்களுக்குத்தான் தங்களுக்குஎன்னவேண்டுமென்றாவது தெரியுமா? ஓட்டுப் பெற்றுச் சென்ற வீரர்களுக்குத்தான் நாட்டின் இன்றைய நிலைக்கு ஏது தேவையென்றாவது அறிந்து கொள்ளும் ஆற்றலிருக்கிறதா? என்று கேட்கிறேன்.

## நல்வாழ்வு அமைக்க

இவ்வித சூழ்நிலையில் திராவிடக் கழகத்தாராகிய நாங்கள் மந்திரி பதவி வகித்தாலும் இன்றைய நிலைதானிருக்குமேயன்றி வேறில்லை. முதலாவதாக மக்களுக்கு நல்வாழ்வு உண்டாக்கத்தக்க பொறுப்புள்ள ஆட்சி அமையவேண்டுமானால், அவர்களைத் தேர்ந்தெடுக்கும் மக்களிடத்திலே அறிவு வளர்ச்சி, மன மாறுதல் ஏற்பட்டாகவேண்டும். அதில்லாதவரை, யார் மந்திரியானாலும் அவர்கள் தங்கள் சொந்தத்தில் லாபமடைய முடியுமேயன்றி மக்களுக்கு நன்மை பயக்க முடியாது. ஒரு சிலராவது பொது நலத்தில் அக்கறையுடையவர்கள் மந்திரிகளாக நீடித்திருக்கமுடியாது. நமது மாஜிப் பிரதமர் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் போன்ற நாணயமுள்ளவர்கள் பதவியில் நீடித்திருக்க முடியவில்லையே.

அரசியலிலோ, பொது வாழ்விலோ என்னைப் பொறுத்தவரை மிக யோக்கியமான நாணயமானவர்கள் யாராவது இருக்கிறார்களா என்றால், இன்று கவர்னர் ஜெனராலாயுள்ள கனம் ராஜகோபாலாச்சாரியார் அவர்களைப்பற்றியும் ஓமந்தூர் ராமசாமி ரெட்டியார் அவர்களைப்பற்றியுந்தான் நான் அடிக்கடி குறிப்பிடுவதுண்டு.

அரசியல் துறையில் இவர்களுக்கும் எனக்கும் கருத்து வேறுபாடிருப்பினும், பொதுவாழ்வில் சிறிதேனும் நேர்மை தவறாமல் நடப்பவர்கள் என்பதில் யாரும் ஆட்சேபணை கூற முடியாது.

நண்பர் ஆச்சாரியார் அவர்களுக்குத் தனது இன அபிமானம் இருக்கிறதென்று கூறலாம். அதைப்பற்றிக் குற்றம் கூற முடியுமா? அந்தப் புத்தி நம்மவர்களிடத்தில் இல்லையென்று நாம் பொறாமைப்பட வேண்டியிருக்கிறதேயல்லாது, அவருக்குத்தனது இன உணர்ச்சியிருப்பது எப்படித் தவறாகும்?

ஆச்சாரியார் அவர்களுக்குத் தனது இன உணர்ச்சி அபிமானம் இருக்கிறதென்றால், நான் மட்டும் என்ன அதில் இளைத்துவிட்டேனா, அவர்களைவிட ஒருபடி மேலாகவேதான் நாமும் இன உணர்ச்சி கொண்டு தொண்டாற்றுகிறோம். எனவே அவரதுபொது நோக்கமே மிகவும் முக்கியமானதாகும். அதே போன்று ஓமந்தூரார் அவர்களும் பொது மக்களை வஞ்சித்தோ ஏமாற்றியோ கொள்கையை விட்டுக் கொடுத்தோ தனக்கென ஒன்றும் தேடிக் கொள்ளவில்லை.

நான் இவர்களை இப்படிப்புகழ்கிறேனே யென்று சிலருக்குச் சந்தேகமிருக்கலாம். தோழர்களே! இந்த இரண்டு பேருந்தான் எனக்கும், எனது இயக்கத்துக்கும் பெருந்தொல்லை விளைவித்தவர்கள். ஆச்சாரியார் அவர்கள் சென்னைப் பிரதமராயிருந்தபோதுதான், சென்ற இந்திஎதிர்ப்புப் போரில் எனக்கு இரண்டாண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. எனது மோட்டார்காரையும் அபராதத்திற்காக ஏலத்தில் போட்டார்கள். இன்னும் எவ்வளவோ அடக்குமுறைகள் உங்களுக்குத் தெரிந்ததுதான்.

நமது ராமசாமிரெட்டியார் அவர்கள் ஆட்சியில், எங்களது இயக்கத்துக்கு ஏற்பட்ட அடக்குமுறைகள் சொல்லத்தரமன்று.

(தொடர்ச்சி 11-ம் பக்கம்)

[உரிமை ஆசிரியருக்கே]

# தொல்காப்பியப் பொருளதிகார விளக்கம்.

—(புலவர் குழந்தை)—

## 1. குறிஞ்சி.

குளிர்கால யாமத்தில் குறிஞ்சி நிலத்தில் (மலை) புணர்ச்சி நிகழும். கதிரவனின் செங்கதிர்களால் பொன்னிறமாய் விளங்கும் இளநீல மேகங்கள் சூழ்ந்த மலையடுக்குகள், தம் பொன்னிறத்தால், தம்மிடம் வருவாருள்ளத்தை உருக்கி நட்புணர்வை உண்டாக்குகின்றன. அய்ப்பசி கார்த்திகை மாதங்களாகிய குளிர் காலமும், அக்கால நள்ளிரவும் குறிஞ்சிக்குரியன. களவொழுக்கத்தில் தலைவியைக் காணுதல் அருமையாக இருத்தல் சிறந்தது. விலங்குகளும் பறவைகளும் இணை பிரியாது வாழுங் காலமும் அதுவே. குளிர்காலமே உயிர்கள் உடனுறையும் எண்ணமுடைய காலமாகும். வெளிப்போக வொட்டாது தடுப்பதற்குரிய அடர் மழைக்காலமே உடனுறைதற்கு ஏற்ற காலம். இரவு பத்து நாழிகைக்கு மேற்பட்ட இடை யாமமே புணர்ச்சிக்குச் சிறந்த பொழுதாகும். "காதலி மாட்டில்லாக் கழித்தஇரவும்" என்றதும் இக்கருத்துப் பற்றியேயாகும். முன்பனிப் பருவமும் வெளியே செல்வதற்கிடையூறாய் உடனுறைவிற்கே பொருந்திய காலமாகும். மலையடுக்குகளின் மறைந்த இடம் களவொழுக்கத்திற்கு ஏற்றதாதல் காண்க.

## 2. பாலை.

வேனிற்கால நண்பகலில், பாலை நிலத்தில் பிரிதல்ஒழுக்கம் நிகழும். பாலையென்பது முல்லை குறிஞ்சி நிலங்களிலுள்ள மாஞ்செடி கொடிகளின் வளம் வெயிலால் வறண்டு, அந்நிலங்களை விட்டுப் பிரிந்த வறண்ட தன்மை. நீர்நிழலில்லாமை, பசியால் வாடியலையும் விலங்குகள் இருத்தல் ஆகியன அவ்வழிச் செல்வோர்க்குத் துன்பந்தருமாகையால், பிரிந்திருக்கும் தலைவிக்கு அருளுணர்வு பிறத்தற்கு ஏதுவாகிறது. பிரிந்து போகின்றவனைப் பற்றிக் கூறுவன வெல்லாம் பாலையாகும். மாசிமுதல் ஆடிமுடியவுள்ள ஆறு மாதமும் மழையின்றியிருக்குமாகையால், இக்காலமே அயலூர்க்குச்செல்வதற்கு ஏற்றகாலமாகும். வேறிடத்திற்குப், வேறு நாட்டிற்கும் பிரிந்து செல்வோர் அவ்வறண்ட நிலத்தின் வழியாகவே செல்ல வேண்டியிருத்தலானும், நண்பகலில் (நடுப்பகல்) வெயிலின் கொடுமை மிகுதியாக இருக்குமாதலானும் இக்காலங்கள் பிரிவிற்கு ஏற்றவையாயின.

## 3. முல்லை.

கார்கால மாலையில் முல்லை நிலத்தில் இருத்தலொழுக்கம், நிகழும். இருத்தல்—பிரிந்து சென்ற தலைவன் வரும்வரை ஆற்றியிருத்தல். மாஞ்செடி கொடிகள் தழைத்த காட்டுநிலம், தழைத்த பசுமை நிறத்தால் தன்னிடம் வருவாருள்ளத்தைக் கிளர்ச்சி பெறச் செய்து அன்புணர்வை உண்டாக்குகிறது. ஆவணி புரட்டாசி மாதங்களாகிய கார்காலமே வெளியூர்க்குச் சென்ற தலைவன் மீளுங்காலமாகும். வெயிற்காலத்திலேயே போன காரியத்தை முடித்துக் கொண்டு மழைக்காலம் வந்ததும் திரும்புவான். வரும்நேரம் மாலையாகும்.

நாடோறும் வெளிவேலை முடித்துத் தலைவன் வீட்டுக்கு வரும் நேரமும் மாலைக்காலமே. தலைவியும் வீட்டு வேலை முடித்து ஓரிடத்தில் இருக்கும் காலம் அதுவே. முல்லை நிலமானது மாலை நேரத்தில்—(சாய்ங்காலம்) தங்கிப் பொழுது போக்குதற்கு ஏற்ற புல்தரையும், நறுமணக்காற்றும், மரநிழலும் உள்ள இடமாதலால், இருத்தலொழுக்கத்திற்குச் சிறந்த இடமாதல் அறிக. [illegible] பூந்தோட்டம் (பார்க்) போன்றதே.

## 4. நெய்தல்.

காலையில் நெய்தல் நிலத்தில் இரங்கலொழுக்கம் நிகழும். கடலில் நெடிய அலைகள் நொடிதோறும் எழுந்து மறையும். அதனால் கடற்கரையில் மணல் மேடு உண்டாகிச் சிறிது நேரம் நிலைத்துப்பின் அழியும். அக்காட்சி பிறப்பு வாழ்வு இறப்புக்களையும், அவற்றின் நிலையாமையையும் நினைப்பித்து இரக்கவுணர்வை உண்டாக்குகிறது. கடல் வழிச் சென்றாரை எதிர்பார்த்திருக்கும் காலம் காலை. இருக்குமிடம் நெய்தல். அவ்விடத்திருக்கும் காலத்தே கடற்காட்சி இரக்கவுணர்ச்சியை உண்டாக்குதலின் இருத்தலாகாது, இரக்கமாயிற்று. கடலலைபோல உயர்ந்துதாழும் இயல்பு மனத்துக்கு உண்மையான் இரக்கம் தோன்றும்.

மாலையில் தலைவன் வரின் புணர்ச்சி விருப்பம் உள்ளதாகலின் தலைவிக்கு ஊடல் நிகழாது. யாமப்பொழுது கழிந்தபின் (வைகறையில்) புணர்ச்சி விருப்பங் குறைபட்டுத் தூக்கக் தெளியாதிருக்குமாகையால் ஊடல் உண்டாகும். விடிந்தபின் தலைவன் வரின், அடங்கிய சினத்தோடு வீட்டு வேலைகளில் தலைவியுள்ளஞ் செல்லும். வாராவிடின், 'பகல்பொழுது கழிந்தன்றித் தலைவன் வரான். இப்பாழும் பகற்பொழுது எப்பொழுது கழியுமோ' என்று தலைவிக்கு மிகுந்த இரக்கந்தோன்றும். தலைவன் பிரிவை நினைந்து தலைவிக்குச் சினமிகினும், சினஞ்செல்லுதற்குரிய இடமான தலைவன் இன்மையால் அவன் வரவை விரும்பி இரக்கந்

(தொடர்ச்சி 10-ம் பக்கம் பார்க்க)

குடி அரசு

14—5—49 சனிக்கிழமை.

# காங்கரஸ் திராவிடத் தோழர்களுக்கு!

"வகுப்புகள் ஜாதிகள் ஒழிய வேண்டும் என்கிறார்கள்; ஆனால் பார்ப்பனர்களை மட்டும் திட்டுகிறார்களே ஏன்?"

இது காங்கரஸ் ஊழியர் மாநாட்டில் பேசிய ஒரு 'தியாக சொரூபி' திராவிடக்கழகத்தின் போக்கை, அதன் நடவடிக்கையை எந்த அளவு உணர்ந்து கொண்டிருக்கிறது என்பதைப் படம் பிடித்துக் காட்டுவதுபோல் நம்மீது—கழகத்தின் மீது சாட்டியிருக்கும் குற்றச்சாட்டு. இப்படிப்பட்ட குற்றச்சாட்டுகளை, இந்த 'அய்ந்தேக்கர் வாலாக்கள்' மட்டும்தான், வேறு பேச்சுப்பேசுவதற்குப் வகையோ, அதற்கான வேலைத் திட்டமோ இல்லாமல், "ஏதோ பேசியாகவேண்டும், அதுவும் காரசாரமாயிருக்கவேண்டும் என்று நினைத்துப் பேசிக்கொண்டு வருகிறார்கள் என்பதல்ல; பொதுவாகவே பல திராவிடத் தோழர்களும் அதாவது 'தியாக மூர்த்திகள்'ல்லாத பல திராவிடத் தோழர்களும் அப்படித்தானோ என்று மயங்குகிறார்கள் அல்லது மயங்கத் தகுந்த நிலையில் வைக்கப்பட்டு இருக்கிறார்கள்.

இந்த மயக்கத்தை—தவறான எண்ணத்தை—திரிபு உணர்ச்சியைப் போக்கும் முறையில் திராவிடக்கழகம் பத்திரிகைகளிலும், மேடைகளிலும் விளக்கி வந்திருக்கிறது என்றாலும், அந்த விளக்கத்தைப் புரிந்து கொள்ளுவதற்கோ அல்லது ஏற்றுக் கொளவதற்கோ மறுத்து வரும் 'குருடர்களும்' 'செவிடர்களு'மான சொரூபங்களுக்காக, அவர்களைப் புரிய வைத்து விடவேண்டு மென்பதற்காக இன்று நாம் இதை எழுதவில்லை. பொதுவாகத் திராவிடத் தோழர்கள் எல்லோருக்குமே—அதாவது நம்மைத் தவறாகக் கருதிக் கொண்டிருக்கும் திராவிடத் தோழர்கள் எல்லோருக்குமே, அவர்கள் தவறைத் திருத்திக் கொள்ள, இதுவும் ஒரு சந்தர்ப்பமாக ஏன் இருக்கக்கூடாது என்கிற ஆசையினாலேயே இதை எழுதலானோம்.

வகுப்புகளும் ஜாதிகளும் ஒழிய வேண்டுமென்கிறோம். அதுமட்டுமா? மனிதன் மனிதனாக வாழ வழி செய்ய வேண்டுமென்கிறோம். இது நூத்துக்கு நூறு உண்மை! ஆனால் நாம் பார்ப்பனர்களைத் திட்டுகிறோம் என்று கூறுகிறார்களே, அல்லது நினைக்கிறார்களே, இது அதைப்போலவே நூத்துக்கு நூறு தவறான உணர்ச்சி, பொய்யான கருத்து! என்பதை முதலிலேயே, திரும்பவும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

மறக்க முடியாத பார்ப்பனக் கொடுமைகளைக் குறித்துப் பெரியாரவர்கள் எழுதியிருக்கும் ஒரு கட்டுரையை, நாம் மற்றொரு புறத்தில் வெளியாக்கியிருக்கிறோம். அதை இன்றைய அரசியல் தலைவர்களாகத் தங்களை எண்ணிக் கொண்டிருக்கும் திராவிடத் தோழர்கள் யாராயிருந்தாலும் நன்றாகக் கருத்தூன்றிப் படிக்கவேண்டும். ஏன்? நாளைக்கு என்று, அவர்களுக்குப் பார்ப்பனர்களால் இன்றைக்கே தோண்டி வைத்து, கண்ணுக்குத் தெரியாமலிருக்கும் படுகுழி, எப்படிப்பட்டதாய் இருக்கும் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக.

நிற்க, பார்ப்பனக் கொடுமைகள் என்பதாகப் பெரியாரவர்கள் பார்ப்பனியக் காங்கரஸில் தாம் பட்டு அநுபவித்த கொடுமைகளைக் கூறுவது—சமுதாயத்தின்முதற்படியில் நெடுங்காலமாயிருந்துவர சாஸ்திரத்தின்பேராலும், கடவுள் பேராலும், சட்டத்தின் பேராலும் பிறப்புரிமை பெற்றிருக்கிறோம் என்று கூறி—நடத்தி வருகிற பார்ப்பனர்கள் எவ்வளவு கீழ்த்தர முறைகளைக் கையாண்டு, எப்படியெல்லாம் திராவிடச் சமுதாயத்தைச் சீரழித்துக் கொண்டு வருகிறார்கள் என்பதை எடுத்துக் காட்டுவதா? பார்ப்பனர்களைத் திட்டுவதாகும். 100-க்கு 3 பேராயிருக்கும் பார்ப்பனர்களில் 100-க்கு 50 பேர் மோசடி செய்திருக்கிறார்கள், திருடியிருக்கிறார்கள், அயோக்கியத்தனம் செய்திருக்கிறார்கள் என்று கோர்ட்டிலுள்ள ரிகார்டு சொல்லுமானால்; அந்தரிக்கார்டை எடுத்துக் காட்டிப், பார்ப்பனர்கள் இப்படியெல்லாம்நடந்திருக்கிறார்கள், அப்படியிருந்தும், 100-க்கு 10, 20 பேர் குற்றம் செய்தார்கள் என்பதற்காக ஒரு ஜாதியையே குற்ற பரம்பரையினர் என்று சொல்லுவது சரியா? நீதியா? என்பது போலத்தானே பார்ப்பனர்களின் யோக்கியதையை வெளிப்படுத்தியிருப்போம். அது எப்படிப் பார்ப்பனரைத் திட்டுவதாகும்?

மறுக்க முடியாத வகையில் அயோக்கியன் என்று முடிவு கட்டப்பட்ட ஒருவனை, அவனைத் தெரிந்து கொள்ளாத மற்றவர்களிடம்—அவனோடு பழகிக் கொண்டிருக்கிற மற்றவர்களிடம் "இவன் இப்படி யெல்லாம் அயோக்கியன் என்று முடிவு செய்யப்பட்டவன், முடியுமானால் பழகாதீர்கள், இல்லாவிட்டால் ஜாக்கிரதையாய்ப் பழகுங்கள்" என்று கூறுவதா அயோக்கியனைத் திட்டுவதாகும்? இதை அந்த அயோக்கியன், தன்னைத் திட்டுவதாகக் குற்றம் கூறுவானென்றால், அதில் எந்த அளவுக்கு உண்மையும் நியாயமும் இருக்கமுடியுமோ, அந்த அளவு தானே நாம் பார்ப்பனர்களைத் திட்டுவது என்கிற குற்றச்சாட்டிலும் இருக்கமுடியும்? அயோக்கியனை, அயோக்கியன் என்று அம்பலப்படுத்துவதால், அந்தஅயோக்கியனின் நடவடிக்கைக்கு ஓரளவு குந்தகம் உண்டாகித்தான் தீரும் என்பதை ஒப்புக் கொள்வோம். அதனாலேயே, அதாவது அயோக்கிய நடவடிக்கையை அவன் செய்ய முடியாததினாலேயே, அவன் எப்படிக் கோபித்துக் கொண்டு விடமுடியும்? அவன் கோபிப்பதிலாவது ஏதோ ஒரு வகையில் அர்த்தம் இருக்கிறது என்றாலும், அவனுக்காக மற்றவர்கள் கோபிப்பதோ, வருத்தப்படுவதோ எந்த வகையான மனிதத்

தன்மையாகும் அல்லது எந்த வகையான ஜீவகாருண்ணியமாகும்? என்று கேட்கிறோம்.

ஆகவே, பார்ப்பனரைத் திட்டுகிறோம் என்பது எவ்வளவு அர்த்தமற்ற-பொறுப்பற்ற குற்றச்சாட்டு என்பதை யோசித்துப் பார்க்கும்படி திராவிடத் தோழர்களை வேண்டுகிறோம்.

அதோடு வகுப்புகள் மறைய வேண்டும், ஜாதிகள் ஒழிக்கப்பட வேண்டும், மனிதன் மனிதனாக வாழ வேண்டும் என்கிற காரியத்துக்காகத் திராவிடக் கழகம் என்ன செய்திருக்கிறது என்பதையும்—முக்கியமாக அதற்கான பரிகாரம் எது என்று நினைத்துச் செய்து வந்திருக்கிறது என்பதையும் இங்கு எடுத்துக் காட்டுவது அவசியமாகிறது.

பார்ப்பனர்களின் நன்மைக்காக-அவர்களின் வருவாய்க்காக-ஆதிக்கத்திற்காக பல நூறு வகுப்புகளாகவும், பல ஆயிரம் ஜாதிகளாகவும், பார்ப்பனர்களால் பிரித்து வைக்கபட்டபடி பிரிந்திருக்கும் மக்களைக் கொண்ட இந்த நாட்டில், 'எல்லோரும் இந்நாட்டு மக்கள்' 'இந்த நாட்டு மன்னர்கள்' என்கிற நிலையை உண்டுபண்ண வேண்டுமென்றால், அதற்கு என்ன வழி? கீழ் நிலையில் இருப்பவர்கள் கீழான நிலைமையில்தான் இருந்து வரவேண்டும், மேல் நிலையில் இருப்பவர்கள் அந்த மேலான நிலையில்தான் இருந்து வரவேண்டும் என்று கூறுவதா, அதற்கான பரிகாரமாகும்? அல்லது கீழ் என்பதும் மேல் என்பதும் ஒழிந்து எல்லோரும் ஒன்று என்னும் நிலைக்குவர முயற்சிக்க வேண்டும் என்று கூறுவது பரிகாரமாகுமா?

பிந்தியதுதான் பரிகாரம் என்றால், அதை நடைமுறையில் சாத்தியமாக்கக் கூடிய—குத்துப் பழி வெட்டுப்பழி இல்லாத, அதாவது ரத்தப் புரட்சி இல்லாத சமாதான முறை, வகுப்புவாரி உரிமைப்படி அந்தந்த மக்களுக்கு, ஒத்தவகுப்பு உரிமையை மறுக்காமலிருப்பதும் — தடைபோடாமலிருப்பதும் தானே ஆகும். இதனுடைய உண்மையை—நியாயத்தை — அவசியத்தை உணர மறுப்பது அல்லது திரித்துக் கூறுவது எவ்வளவு வடிகட்டின மோசடியாகும்?

வகுப்புவாரி உரிமையை ஏதோ ஒரு அளவுக்காவது அன்றைய ஜஸ்டிஸ் கட்சியார் உணர்ந்து, அதற்கான விகிதாச்சார முறையை வழங்கவேண்டுமென்று அஸ்திவாரம் போட்டதினாலேயே, இந்த நாட்டில் உண்டாகியிருக்கவேண்டிய ஒரு பெரும் ரத்தப் புரட்சி உண்டாகவில்லை என்பதைப் பார்ப்பனர்கள் ஏனோ மறந்துவிடுகிறார்கள்?

இந்த வகுப்புவாரி உரிமைக்கு, கிரமமாகப் பார்ப்பனர்கள் நன்றி கூற வேண்டியதிருக்க, அதைவிட்டுவிட்டு அன்றிலிருந்து இன்றுவரை அதை ஒழித்துக்கட்டுவதிலேயே கண்ணும் கருத்துமாயிருந்து காரியம் நடத்திக்கொண்டுவருவதை, சமாதான முறையில் தடுத்து வருபவர்கள் யார் என்பதை நம் அருமைத் திராவிடத் தோழர்கள் எண்ணிப்பார்க்கவேண்டும.

வகுப்பு விகிதாச்சாரப்படி உத்தியோகங்களும், கல்லூரிகளில் ஸ்தானங்களும் என்று, இன்றைக்கிருக்கிற அரைக்கால் நியாயம்கூட இல்லாவிட்டால், திராவிடத் தோழர்களில் இன்று நூற்றுக்குப் பத்துப் பேராவது படித்திருக்கிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலையையோ, பார்ப்பனர்கள் விகிதாச்சாரத்துக்கு அரைக்கால் திட்டமாவது திராவிடர்கள் உத்தியோகங்களில் இருந்துவருகிறார்கள் என்று சொல்லக்கூடிய நிலையையோ காணமுடியுமா? என்பதைத் திராவிடர்கள் சற்று எண்ணிப் பார்க்கவேண்டும்.

இந்த அளவுக்காவது இருக்க வேண்டுமென்று ஆசைபட்டு, அதனாலேயே தன் பதவியை விட்டு ஓடிப்போகவேண்டிய அவசியத்துக்கு ஓமந்தூரார் வந்துதீர வேண்டிய நிலையில், பார்ப்பனர்களின் சூழ்ச்சி பலித்துவிட்டதென்றாலும், இந்த வகுப்புரிமைக்காக அன்றுதொட்டுப் பாடுபட்டு, அதனாலேயே பார்ப்பனர்களின் தூற்றுதலுக்கும்பழிக்கும் ஆளாகி, கஷ்ட நஷ்டங்களுக்கிடையேயும் சலியாது உழைத்துவரும் பெரியார் அவர்களுக்கு, நன்றி கொல்லாத திராவிடர்கள் எவ்வளவுதூரம் கடமைப்பட்டிருக்கிறார்கள்!

"ஆங்கில அரசாங்கத்தின் 150 வருஷத்திற்கு மேற்பட்ட ஆட்சியின் பலனாய்—வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததின் பலனாய், பிராமணரல்லாத வகுப்புகள் எவ்வளவு முற்போக்கடைந்திருக்கிறது என்று பார்த்தால் உண்மைப் பிராமணரல்லாத ரத்தம் ஓடும் மனிதன் துடிக்காமல் இருக்க மாட்டான். நம் தென்னாட்டு அரசாட்சியில் பிராமணரல்லாதார் நிலை எப்படி இருக்கிறது, பிராமணர்கள் நிலை எப்படி இருக்கிறது என்பது, கீழ்க்கண்ட கணக்குகளினால் அறிந்து கொள்ளக்கோருகிறோம். நமது அரசாங்கத்தில் 35 ரூபாய் சம்பளத்திற்குக் கீழ்ப்பட்ட உத்தியோகங்களில் அதாவது வாசல் கூட்டுவது, மேஜை துடைப்பது, பங்கா இழுப்பது, அதிகாரிகளுக்குக் கால் கை அழுத்துவது முதலிய வேலைகளில் பிராமணரல்லாதார் 37125 பேர்கள் இருக்கிறார்கள். பிராமணர்கள் 1810 பேர் மாத்திரமே இருக்கிறார்கள். இவர்களும், சம்பளம் குறைவாயிருந்தாலும் தனுக்காய் மேலதிகாரிகளை ஏமாற்றி, ஷை வேலைகளைப் பார்க்காமல் அதிகாரம் செலுத்தி வருவார்கள். 35-க்கு மேல்பட்டு 100 ரூபாய் வரை சம்பளம் உள்ள உத்தியோகத்தில் பிராமணரல்லாதார் 7003. பிராமணர்களோ10934. இந்த இடத்திலேயே நம்மைவிட பிராமணர்கள் 4000 பேர் அதிகமாகி விட்டார்கள். 100-க்கு மேற்பட்டு 250 ரூ. வரை உள்ள உத்தியோகத்தில் பிராமணர் 2679 பேரும், பிராமணரல்லாதார் 1666 பேருமாயிருக்கிறார்கள். இந்த இடத்தில் பிராமணரல்லாதாரைவிட பிராமணர்கள் 1000 பேர் அதிகமாயிருக்கிறார்கள். 250 ரூபாய்க்கு மேற்பட்ட உத்தியோகங்களில பிராமணர்கள் 594, பிராமணரல்லாதார் 280 பேர்கள் இருக்கிறார்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு இரண்டிற்கு மேல் போய் விட்டார்கள். கலெக்டர் உத்தியோகத்தில் 11 உத்தியோகம் இந்தியர்கள் வகிப்பதில் 9 பேர் பிராமணர்கள். இந்த இடத்தில் ஒன்றுக்கு அய்ந்தாய் விட்டார்கள். ரிவின்யூ போர்டில் உள்ள ஒரு இந்திய மெம்பர் உத்தியோகத்தில் பிராமணர்தான இருக்கிறார். இந்தியருக்குக் கொடுக்கப்பட்ட கைத்தொழில் டைரக்டர் வேலையில் பிராமணரே இருக்கிறார். அரசாங்கக் காரியதரிசி வேலையில் உள்ள இந்தியரும் பிராமணரே.

200 ஜில்லா முன்சீப்புகளில் 150 பேர் பிராமணர்கள். 61 சப் ஜட்ஜுகளில் 45 பேர் பிராமணர்கள். ஜில்லா ஜட்ஜுகளில் 7 பேர் பிராமணர்கள். அதாவது எடுபிடி உத்தியோகங்களில் பிராமணரல்லாதாரும், 100, 500, 1000, 2000, 3000 உள்ள உத்தியோகங்களில் பிராமணர்களும் அனுபவிக்கிறார்கள். வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் வேண்டாம் என்று சொல்லும் நம் தோழர்களை நாம் ஒரு கேள்வி கேட்கின்றோம். அதாவது:—

இவ்வித 1000, 2000, 3000 உள்ள

உத்தியோகங்கள் பிராமணரல்லாத இந்துக்கள் என்போராகிய 100ல் 70 பேருக்கு மேலாக இருக்கும் பிராமணரல்லாதாருக்குக் குறைவாயிருப்பதற்கும் 100ல் 3 பேராயிருக்கும் பிராமணர்களுக்கு ஏகபோகமாயிருப்பதற்கும் யோக்கியதை இல்லாததாலா வகுப்புவாரிப் பிரதிநிதித்துவம் இல்லாததாலா என்று கேட்பதோடு, நம் தோழர்கள் கோரும் சுயராஜ்யமோ சீர்திருத்தமோ வரவர பிராமணர்களுக்கு உத்தியோகம் பெருக்கமாகுமா அல்லது ஏழைகளுக்கு வரி குறைந்து தொழிலாளிகளுக்குத் தொழில் கிடைக்குமா என்று கேட்கிறோம்.”

இது பெரியாரவர்கள் 18-4-26ல் வகுப்புவாரி உரிமை என்கிற தலைப்பில் எழுதிய “குடி அரசு” தலையங்கமாகும். இந்த உரிமைப் போராட்ட அடிப்படையினால்தான், பெரியாரவர்கள் காங்கிரசை விட்டு விலக நேர்ந்தது என்பதைய, அன்றிலிருந்து இன்றுவரை அந்தப் போராட்டமே தொடர்ந்து நடைபெற்றுக் கொண்டிருக்கிறது என்பதையும் யாரே மறந்துவிட முடியும்?

பெரியாரவர்கள் 1926ல் உள்ள நிலைமையை ஒருவாறு எடுத்துக் காட்டியிருப்பதையும், இன்று அந்த நிலைமை எவ்வளவு தூரம் மாறியிருக்கிறது என்பதையும் ஒப்பிட்டுப் பார்க்கும்போது இந்த மாறுதல் யாரால்? எக்கட்சியால்? ஏற்பட்டது என்று கேட்கிறோம். மேலும் இந்த நிலைமையைப் புள்ளி விபரங்களோடு எடுத்துக் காட்டி, இன்றைக்கும் நாம்தான் நீதிக்குப் போராடுகிறோமே தவிர வேறு யாருக்காவது இதைக் கேட்கத் தைரியமாவது ஏற்பட்டதா என்றும் கேட்கிறோம்.

இதைப் பார்க்கும் போது, இன்றைக்கும் சர்க்கார் கணக்குப்படி 3 பேராயிருக்கும் பார்ப்பனர்களுக்கு 14 ஸ்தானமும், பார்ப்பனரல்லாத, முஸ்லிம் அல்லாத, கிறிஸ்துவரல்லாத, ஆதிதிராவிடரல்லாத 85 பேராயிருக்கும் திராவிடர்களுக்கு 56 ஸ்தானமும் என்றால்—இந்த முறை கேடான நீதிக்குக்கூட, லட்சுமிகளும் லட்சுமி புருஷர்களும் கூடியாய்த் துடிக்கின்றார்கள் என்றால், இந்த அக்கிரமம் தொடர்ந்து இருந்து வர வேண்டியதுதானா? இதைக் கேட்பவர்கள் யார்? அருமைக் காங்கரஸ் திராவிடத் தோழர்களே எண்ணிப்பாருங்கள்.

## சுந்தரராவ் நாயுடு மறைவு.



நீதிக்கட்சியின் முன்னாள் பிரதமத் தலைவர்களுள் ஒருவரான தோழர் டி. சுந்தரராவ் நாயுடு, உதகையில் 7-5-49 இருதயநோயால் மரணமடைந்தார் எனச் செய்தி கேட்டு வருந்துகிறோம். அவர் சென்னை நகரசபையில் எழும்பூர் பகுதியின் உறுப்பினராகப் பல காலமிருந்தார். அதன் தலைவராகவும் ஆனார். அக்காலத்தில் அவர் நகர அபிவிருத்தி நிர்வாகத்தில் பெரும்பங்கு கொண்டுழைத்தார். பழைய சட்ட சபையில் உறுப்பினராயிருந்தார். பிரதம மந்திரியின் கவுன்சில் காரியதரிசியாகவும் இருந்தார். சிறிது காலம் 1928ல் கீழ்க்கோர்ட் நீதிபதியாக இருந்து வேலை செய்தார்.

அவர் பொதுச்சேவையில் பெரிதும் ஆதித்திராவிடர்நலனுக்குழைத்தவர். தம் இறுதி நாள் வரை திராவிட இன முன்னேற்றத்திற்கு பார்ப்பனரல்லாதார் இயக்கந் தொட்டுத் தொண்டாற்றியவர்.

அவர் திடீரென்று இருதய நோயால் தமது 59-வது வயதில் மூன்று பையன்களையும் நான்கு பெண்களையும் விட்டுக் காலமானார். அவருடைய குடும்பத்தாருக்கும் அவர் பிரிவுக்கு வருந்தும் நண்பர்களுக்கும் நம் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

## மறைவு.

துறையூர் தோழர் டி. எம். துரைசாமி அவர்களின் வாழ்க்கைத் துணைவியார் ஆண்டாள் அம்மையார் 19-4-49ல் இயற்கை எய்தியதை முன்னிட்டு 10-5-49ல் பார்ப்பனரில்லாமல் சடங்கு நடந்தேறியது.

அதன் நினைவாக குடிஅரசுக்குத் ரூ. 1-0-0 நன்கொடை வரப்பெற்றோம். [ஆ—ர்]

[7ம் பக்கத் தொடர்ச்சி]

தோன்றும். கடலில் மீன்பிடிக்கச் செல்லுங்காலமும் காலையே. காலையில் எழுந்ததும் கடலைப் பார்க்கின் கப்பல் வாராவிடின் இரக்கந்தோன்றுதல் இயல்பே.

**5.** மருதம்.

வைகறையில் மருதநிலத்தில் ஊடல் நிகழும். வெள்ளியை உருக்கி வார்த்தாற்போன்ற பளபளப்பான நீர் வளமிக்க வயல் நிலமானது, தனது வளஞ்சேர்ந்த வெண்ணிறத்தால், தன்னிடம் வருவாருள்ளத்தில் பல அரிய தொழில் முயற்சிகளுக்கிடந் தந்து அறிவுணர்ச்சியை உண்டாக்குகிறது. மாட மாளிகைகளும், பல்வகைச் செல்வங்களும் ஊடலை உண்டாக்கும். பரத்தையர் இடத்திலிருந்து தலைவன் வருங்காலம் வைகறையேயாதலால், அது தலைவி ஊடுதற்குரிய காலமாகும். செல்வமும், தலைமையுமே பரத்தைமைக்குக் காரணமாகையால், மருத நிலத்தேதான் பரத்தைமையும் அதுபற்றித் தலைவிக்கு ஊடலும் நிகழும்.

## ஏஜண்டுகள் கவனிக்க.

அடுத்த வாரம் பில் பாக்கி உள்ள ஏஜண்டுகளுக்கு வேறு எவ்வித அறிவிப்புமின்றிப் பத்திரிகை நிறுத்தப்பெறும்.

## உடனே தேவை.

ஏஜண்டுகள் இல்லாத ஊர்களுக்கு நம் பத்திரிகையைவிற்க டிபாசிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

மானேஜர், “குடி அரசு” ஈரோடு

(6ம் பக்கத்தொடர்ச்சி)

## சுயநலம் உண்டா?

எனினும் பித்தலாட்டமோ, பதவிக்காகச் சூழ்ச்சியோ, அதிகாரங்களைத் தன் சொந்தநலனுக்காகத் துஷ்பிரயோகம் செய்வதோ இவர்களிடத்தில் சிறிதும் கிடையாது. கொள்கையைப் பெரிதாகக் கொண்டார்களேயன்றிப் பதவிதான் நிரந்தரம் என்று அதற்கு அடிமையாய்விடவில்லை. அதனாலேதான் நண்பர் ராமசாமிரெட்டியார் அவர்கள் பதவி நிலைப்பதற்காக பேரமோ, சூதுவாதோ செய்யாமல் வெளியேறிவிட்டார். ஆனால் அவர் கொண்ட லட்சியத்தை ஏறத்தாழ நிறைவேற்றிவிட்டார்.

இன்று மந்திரிசபையில் ஒரு பார்ப்பனருக்கு மேல்வர முடிந்ததா? ஹைகோர்ட் பிரதம நீதிபதி பார்ப்பனராக, வர முடிந்ததா? மற்றும் ஹைகோர்ட் நீதிபதிகளில் திராவிடர்கள்வர முடியுமென்று இதற்குமுன் நாம் எதிர்பார்த்திருக்கமுடியுமா? மற்றும் போலீஸ், இலாக்காவில் பொறுப்புள்ள உத்தியோகங்களில் திராவிடர்கள்தானே இன்று இருந்துவருகின்றனர். கலெக்டர் முதலான உத்தியோகங்களிலும் அவர் வகுப்புவாரி பிரதிநிதித்துவத்தை எவ்வளவு நேர்மையாக அமுல் நடத்தியிருக்கிறார். இதைக் கண்டுதான் பார்ப்பனர்கள் அவர்மீது காய்ந்து விழுந்து டெல்லி அதிகாரிகள் வரை கூப்பாடு போட்டனர்.

ஆனால் ராமசாமி ரெட்டியார் அவர்கள், தான் செய்த ஒவ்வொரு காரியத்திலும் உள்ள நேர்மையை அவர்களுக்கு எடுத்துக்காட்டியபின், எந்த டெல்லி அதிகாரிகள், பார்ப்பனர் பேச்சைக் கேட்டு இவரைத் தவறாய் நினைத்தார்களோ அவர்களே, குறிப்பாகச் சர்தார் பட்டேல் அவர்களே ஓமந்தூராரின் திறமை, நேர்மை ஆகியவைகள்பற்றி சென்னையில் வந்திருந்தபோது வெளிப்படையாய்க் கூறிவிட்டுச் சென்றாரே. அவர்மட்டுமா? கனம் ஆச்சாரியாரிடம் பார்ப்பனர்கள் எல்லாம் இந்த ஓமந்தூர் ராமசாமி ரெட்டி, ராமசாமி நாய்க்கரைவிட மேலேபோய்விட்டார், இதற்கு உதாரணம் வேண்டுமானால் ரெட்டியாரை அடிக்கடி ராமசாமி நாய்க்கரும், அவரது திராவிடர்கழகத்தாரும் புகழ்ந்து பேசுகின்றார்கள், எழுதுகின்றார்கள் என்று கூப்பாடு போட்டதற்கு, என்ன சொன்னார் தெரியுமோ ஆச்சாரியார்; அட பாவிகளா! திராவிடர் கழகத்தாரும் ராமசாமி நாய்க்கரும் புகழும் அளவுக்கு ஆட்சி நடத்துகிறார் என்றால், அதுஎனக்குப்பெரும் மகிழ்ச்சியையல்லவா அளிக்கிறது. அந்த ஒரு மந்திரியையாவது அவர்கள் ஒப்புக் கொள்கிறார்களே அதுவனா நமக்கு லாபமல்லவா? ரெட்டியார் மிகசாமார்த்தியமாகச் சமாளித்துஎப்படியோஆட்சி நடத்துகிறார். அவருக்கு ஒன்றும் தொல்லை விளைவிக்காதீர்கள். ரெட்டியாரைப் பதவியிலிருந்து தள்ளினீர்களோ தீர்ந்தது, அதிலிருந்துவீண்வம்பு தான் ஏற்படும் என்று பார்ப்பனர்களிடமும் அவர்களது ஆட்களிடமும் எச்சரித்து அனுப்பியிருக்கிறார்.

## புதுப் பிரதமர்பற்றி....

அவ்வாறிருந்தும் ஓமந்தூராரை அவர்கள் விட்டபாடில்லை. கடைசியாக அவரே பதவியிலிருந்து, அதாவது போட்டியிலிருந்து விலகிவிட்டார். எனினும் அவருக்குப் பதிலாக ஒரு திராவிடரே வர முடிந்ததேயன்றிப் பார்ப்பனர் வரமுடியவில்லை. இனி முடியவும் முடியாது. ஆனால் இப்போது வந்துள்ள பிரதமர் அவரது கொள்கையைப் பின்பற்றுகிறாரோ அல்லது சுயநலக்காரரின் ஆதிக்க ஆணவங்களுக்கு விட்டுக் கொடுத்து விடுவாரோ என்பதை நாம் சற்று பொறுத்திருந்து பார்க்கவேண்டியிருக்கிறது.

இவைகளை ஏன் கூறுகிறேன் என்றால், ராமசாமி ரெட்டியார் இவ்வளவு ஒழுங்காக நடந்து வந்தும் பதவியிருந்து வெளியேற வேண்டியிருக்கிறதென்றால், இன்றைய ஆட்சி முறைக்கும் நாணயத்திற்கும் சம்பந்தம் இல்லை யென்றல்லவா அது எடுத்துக் காட்டுகிறது? அப்பேர்ப்பட்ட இடத்தில் நாங்கள் போய் உட்கார்ந்தால் மட்டும் என்ன சாதித்துவிடமுடியும்? ராமசாமி ரெட்டியாராவது இரண்டாண்டுகள் சமாளித்தார். நாங்கள் இரண்டு நாட்கள் இருக்க முடியாதே, அல்லது நாங்களும் சுயநலக்காரர்களாகிவிட்டால் பதவியும் பட்டமும் பெரிதென்று மானத்தைவிட்டு வயிறு நிரப்பலாம்.

எனவேதான் நாங்கள் காங்கரசுக்கு அரசியல் விரோதிகளல்ல என்றும், எங்களுக்கு அரசியலைப்பற்றி அக்கரை கிடையாது என்றும் விளக்கமாகவும் உறுதியாகவும் கூறி வருகிறோம்.

அதுமட்டுமல்ல, இன்றைய ஓட்டர்களின் எண்ணிக்கை நூற்றுக்கு 10 தான் ஆகும். அதுவும் படித்தவர்—பணக்காரர்கள். இந்த ஓட்களால் மட்டும் தேர்ந்தெடுக்கும் சட்டசபை உறுப்பினர்—மந்திரிகளே இவ்வாறிருக்கையில் வரப்போகும் தேர்தலில் வயது வந்தவர்க்கெல்லாம் ஓட்டு அளிக்கப் பட்டிருக்கிறது. அதாவது திருடன், காலாடித்தனம் செய்பவன், எதற்கும் அருகதையற்றவன், பாமரர் ஆகிய அனைவருக்கும் ஓட்டு. இவர்கள் எப்பேர்ப்பட்டவர்களைத் தேர்ந்தெடுப்பார்கள் என்பதை சற்று நடுநிலையிலிருந்து யோசித்தால் நான் ஏன் அரசியல் வேலை முக்கியமல்ல என்று கூறுகிறேன் என்பது விளங்கும்.

தோழர்களே! நான் இவ்வாறு கூறுவதால் படித்தவர்களுக்கும்—பணக்காரர்களுக்குமட்டுமே ஓட்டிருக்க வேண்டும், மற்றவர்களுக்குக் கூடாது என்று நான் சொல்வதாக சிலர் தவறாகக் கருதக்கூடும். பாட்டாளி மக்களுக்கும் ஏழைகளுக்கும் உள்ள உயரிய ஒரே சக்தி அவர்களுக்கிருக்கும் ஓட்டு முறை ஒன்றுதான். ஆனால் அதை உபயோகிக்கும் அறிவு வளர்ச்சி பெறாமல் ஓட்டர்களாகமட்டுமிருந்தால், பொது ஜன சர்க்கார் ஏற்படாது என்பதுடன் அதற்குப் பதிலாக ஜனநாயகம் என்னும் பேரால் காட்டுமிராண்டித்தனமான அக்கிரம ஆட்சிதான் ஏற்படும். ஓரளவு இன்று அதன் அறிகுறிகளையும் கண்டு வருகிறோம்.

## எங்கள் ஆசை.

எனவே திராவிடர் இயக்கத்தினராகிய எங்களது முதல் வேலையாக மக்களிடையேயுள்ள மடமையை, அறிவின்மையை ஒழித்து அவர்களை அறிவுள்ள மக்களாக்குவதாகக் கொண்டிருக்கிறோம். அதன் பின்னரே மக்கள் தங்களின் தேவைகளை அறிந்து அதற்கேற்ற ஆட்சியாளரையும் தேர்ந்தெடுக்க முடியும் என்பதே எனது கருத்தாகும். இந்நிலை ஏற்படாதவரை அரசியல் வேலையென்பது ஒரு சுயநலக் கூட்டத்தாரின் சொந்த நலனுக்குகந்ததாகவே முடியும் என்பது உறுதி. இதன் காரணமாகத்தான் நான் மக்களிடையே முதன்முதலில் சமுதாய விழிப்பை, வளர்ச்சியை உண்டாக்கப் பாடுபட்டு வருவதின் கருத்துமாகும்.

## கேலிக்கூத்து....

அன்பர்களே! நம் நாட்டு அரசியல் பற்றி மட்டுமல்ல, இந்திய அரசியலைத்தான் எடுத்துக் கொள்ளுங்கள். எவ்வளவு கேவல நிலைக்குச் சென்றுவிட்டது? உலகிலே எல்லா நாடுகளும் முடி அரசிலிருந்து விடுபட்டு வரும் இது சமயத்தில், இந்திய நாடானது முடி அரசின் கீழ் ஓர் குடியேற்ற நாட்டு அந்தஸ்துடையதாக ஆக்கப்பட்டுள்ளது. அதாவது உலகில் பெரும்பாலும் அரசர்களை அதிபதியாகக் கொண்ட நாடுகள் இன்று கிடையாது. பாக்கிஸ்தான், சிலோன் போன்ற நாடுகள் பிரிட்டிஷ் மன்னரின் ஆதிபத்தியத்திற்கு உட்பட்ட நாடுகளாகிவிட்டன. அதிலே இந்தியாவும் ஒன்று. ஆனால் அதை மறைக்க, இந்தியாவுக்கு மட்டும் தனிச் சலுகை, விரைவில் குடி அரசாகிவிடும் என்றெல்லாம் பித்தலாட்டங்கள் செய்யப்படுகின்றன.

இந்தக் குடியேற்ற நாட்டந்தஸ்துக்

இங்கர்சால் சொற்பொழிவு.

# ஒரு நன்றி கூறும் நடப்பு!

தமிழாக்கம்:— நெடுஞ்சேரலாதன்.

உலக மகாயுத்தம் யாது செய்துள்ளது?

சில ஆண்டுகட்கு முன் ஒரு சில மக்கள் தங்கள் மூளையைப் பயன்படுத்துமளவு கெட்டவர்களாகப் போய்விட்டார்கள். அதன் பலனாக அவர்கள் பார்க்கவும், கேட்கவுமாரம்பித்தார்கள். அவர்கள் உண்மையாகப் பார்த்து, பின் சிந்திக்க ஆரம்பித்தார்கள். இவ்வுலகத்தைப் பற்றிச் சிறிது சிரமம் எடுக்க, அவர்கள் மோட்ச நரகத்தை முழுக்கமுழுக்க மறந்துவிட்டனர். அவர்கள்மண்ணையும், மலையையும் ஆராய்ந்தார்கள். ஆற்றாலும் கடலாலும் யாது செய்யப்படுகிறது, என்பதை அறிந்தார்கள். பூமியின் தூசியைப்பற்றி கொஞ்சம் தெரிந்துகொண்டார்கள். 70,000-ம் அடி பருமனுள்ள மலைகள்—மலைகளெல்லாம் கடலில் சேர்ந்ததையும்—ஆரம்பமாவதையும் அவர்கள் உணர்ந்தார்கள். கரி, ஒரு காலத்தில் மரம் செடிகளாக இருந்ததை அறிந்தார்கள். தம்மால் இயன்ற அளவு கணித்து முப்பன்று, கடைசியாக, செடி, மரங்கள் கரியாக மாற அறுபது அல்லது எழுபது இலட்சம் வருஷம் பிடித்திருக்கும் என்றமுடிவுக்குவந்தார்கள். அவர்கள் வெண் சுண்ணத்தை ஆராய்ந்து, அது கண்ணிற்குத் தோற்றாத நுண்ணிய உயிர்வகையின் ஓடுகளாகும்; சொல்லப்போனால் தூசிகளாகும் என்பதை உணர்ந்தனர். இந்த தூசி சிற்சில சமயம் ஐரோப்பாக் கண்டமளவு பரந்தும், சிலசமயம் ஒரு மைல் ஆழத்திலும் இருக்கும். இப்படி வெண் சுண்ணமாக மாற பல இலட்ச ஆண்டுகள் பிடித்திருக்கக்கூடும்.

சுண்ண ஆராய்ச்சியின் தனிப்பெரும் அத்தாட்சியாக விளங்கிய 'லைல்' என்பார், அதன் மாற்றம் காண ஏறக்குறைய இருபது இலட்சம் ஆண்டுகள் பிடித்திருக்கக் கூடும் என்று கூறுகிறார். ஆழ்ந்த பழமையான கடலின் அடியிலே அணு அணுவாகப்—புரியமுடியாத தூசி நிலையிலே, பரந்து ஒன்று குழுமிய—மிக மெதுவாகக்கூடிய நிலையை ஓர்ந்து பாருங்கள்! காணமுடியாத அளவிலே—குறுகிய அளவிலே வாழும் உயிர்கள் அதன் சிறு இல்லமான சுண்ணத்தைக் கட்டி, பிறருக்காக உயிரைக் கொடுத்து, அதன் உடலை அலைகளினடியிலே விடுத்து, பல தலைமுறையாகப் பரந்த பெரும் கண்டங்கள்—தீவுகள்போல அமைத்திருப்பதையும்எண்ணிக்காணுங்கள்!

நாம் இப்போது அறிந்த உயிரினங்களுக்கெல்லாம் முன்னே—பறக்கும் பல்லிகளுக்கெல்லாம்—முன்னே—பயங்கரப் போர் மிருகங்களுக்கெல்லாம் முன்னே-மூச்சின்ஒலி பொருமும் பாம்புகளுக்கெல்லாம் முன்னே-இறக்கையும், சுழற்சியும் கொண்ட பயங்கர உயிர்கள் வாழுவதற்கு முன்னே-பெரும் மலைகட்கெல்லாம் முன்னே—இயேசுனிலே நாம் முதல் உயிர் வாழ்வனவற்றைக் கண்டு பிடிக்கும் முன்னே—மலைகள், கடல்கள், ஆறுகளெல்லாம் காணும் முன்னே—ஆவி வடிவினின்றும் கடினமாகி ஒன்று குழுமியிருந்த உலகை உணரு முன்னே—அலைகளின் ஆரம்பத்திற்கு முன்னே—நெருப்பு-நெருப்பிலே எழும் சுடர் தோற்றும் முன்னே—பூமிப் பொருள்களெல்லாம் சூரியனிலே சுடர் ஒலித்துக் கொண்டு, ஏனைய தாரகைகளோடு நடுவிலே உள்ள நெருப்பைச் சுற்றி வந்த காலங்கட்கு முன்னே சென்று சிந்தித்துப் பாருங்கள்.

எத்தனை இரவு பகல்கள் இக்கால எல்லையின் இடையே இருப்பதை எண்ணிப்பாருங்கள்! நேரம் என்று உதிரும் தழைகளிலே—இறந்த காலம் என்ற (காற்றில்) தூற்றப்பட்ட பாலைவனங்களிலே கழிந்த எண்ணற்ற நூற்றாண்டுகளை எண்ணிப்பாருங்கள்!

இயற்கை அவசரப்படுவதில்லை. நேரம் வீணாவதுமில்லை; தொலைந்துபோவதுமில்லை; வருங்காலம் அழியாததும் இறந்தகாலம் எல்லாம் அங்ஙனம், இருந்திராவிடினும், இருக்கவேண்டியதாகும். எல்லைக்கடங்கா இயற்கைக்கு நஷ்டமோ அன்றி இலாபமோ தெரியாது.

(வளரும்)

---

ளாகவா இவ்வளவு தியாகம் செய்தனர் என்று கேட்கிறேன். அக்காலத்தில் மிதவாதிகள் கேட்டுவந்த குடியேற்ற நாட்டு அந்தஸ்துக்கு, இன்று சுயராஜ்ய வீரர், பொதுவுடமை வீரர் ஜவஹர்லால் இந்தியாவைக் கொண்டுவந்துவிட்டார். இது எவ்வளவு கேலிக்கூத்து என்பதை அரசியலிலே ஞானமுள்ளவர்கள் மட்டுமே ஒப்புக்கொள்வர்.

இவ்வாறு இந்தியாவை டெல்லி சர்க்கார், மன்னரின் ஆதிபத்தியத்திற்கு உட்பட்ட நாடாக்கக் காரணம் என்ன? தனக்கு இரண்டுகண் போனாலும் எதிரிக்கு ஒரு கண் போகட்டும் என்று கூறுவார்களே, அம்மாதிரியாக, இந்தியாவில் ஒவ்வொரு இனமும் தங்களின் உரிமையாகிய தனி அரசு கேட்கின்றது. குறிப்பாக நம் திராவிடநாடு தனித்து சுய ஆட்சி பெறவேண்டுமென்று கிளர்ச்சி செய்வது டெல்லி ஆதிக்கத்துக்குப் பெருந்தலைவலியாயிருக்கிறது. தென்னாட்டினர் தங்களது உரிமையைப் பெற இறங்கிவிட்டால், எத்தனை[illegible]ட்டில் இருக்கும் கொந்தளிப்பையே சமாளிக்கமுடியாது தவிக்கும் நாம், தென்னாட்டினரை வெல்ல முடியாது என்று கருதியே, பிரிட்டிஷாரின ஆதிபத்திய உறவைக்கொண்டு தென்னாட்டினர்களை அடக்கி ஆளலாம் என்ற சிறுமதி கொண்டு பாக்கிஸ்தான், சிலோன், தென்ஆப்பிரிக்கா போன்ற நாடுகள் போன்று இந்தியாவும் ஏகாதிபத்திய முறைக்கு அடிமைப்பட்டுவிட்டது. இந்த லட்சணத்திலுள்ள அரசியலைப்பற்றி நாம் என்ன செய்வது?

எனவே மக்களுக்கு சற்றுபயனுள்ள காரியமான சமுதாயத் தொண்டிலாவது பாடுபட்டால், அதன்மூலம் காலாகாலத்தில் நாடு சீர்திருந்தும் என்ற நம்பிக்கையையும் உறுதியையும் கொண்டே, திராவிடர் இயக்கம் அத்துறையில் பாடுபட்டு வருகின்றது. இதை காங்கரஸ் திராவிடர்கள்அறிந்து எங்களுக்கு எதிரிகளாகவும் பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகவும் இராமல், நம்மக்களின் உண்மை விடுதலைக்கு உழைக்க முன்வரவேண்டுகிறேன்''

(குறிப்பு:-இந்நிலையில் மழை பலமாகப் பெய்ததால் கூட்டம் முடிவுக்கு வந்து விட்டது.)

புளுகு மூட்டை.

# கலைவாணி!

கடும் வெயிலில் அலைந்து வந்த களைப்பு; அலுத்துப் போய்ப் படுக்கையை விரித்தேன். அடியில் ஏதோ ஒரு புத்தகம் கிடந்தது. ஆத்திரத்துடன் காலால் உதைத்துத்தள்ளினேன். "சே, சே! என்னடா தம்பி இது! சரஸ்வதியைக் காலால் உதைக்கலாமா? நீ படித்த பிள்ளையாயிற்றே! கண்ணில் ஒற்றிக்கொள்ளப்பா!" என்று கூறிக்கொண்டே என் பாட்டி அருகில் வந்தார்கள். கோபம் அதிகமாக வந்தது. அவர்களை எரித்து விடுவது போல் முறைத்துப் பார்த்து விட்டு, தடாலென்று படுக்கையில் சாய்ந்தேன். என் பாட்டிக்கு ஆனா, ஆவன்னா கூடத்தெரியாது. ஆனால் புஸ்தகத்தைச் சரஸ்வதியென்றும், பூசிக்கத்தக்க பொருளென்றும் கூறுகிறார்கள். இந்த எண்ணம் அவர்கள் மனத்தில் எப்படி நுழைந்தது? இதைப் புகுத்தியது யார்? சரசுவதி என்பவள் உண்மையில் எங்கிருக்கிறாள்? அவள் பிரம்மாவின் நாவில் அல்லவா குடியிருப்பதாகச் சொல்லுகிறார்கள்? ஒருவன் நாவில் மற்றொருத்தி எங்ஙனம் தங்க முடியும்......?

அடே! இதென்ன ஒரே வெண்மை! கண் பூத்துப்போவது போல் வெள்ளை நிறம் கண்ணைப் பறிக்கிறதே! ஆகாகா! அதிசயந்தான்! வெள்ளைத் தாமரைப் பூவொன்று அப்படியே மிதந்து வருவது போல் என்னை நோக்கி வந்து கொண்டேயிருக்கிறது. அதன் மேல் ஓரிளம் பெண்ணல்லவா வீற்றிருக்கிறாள்! தூய வெள்ளை உடை! உச்சி முதல் உள்ளங்கால் வரை எல்லாமே வெள்ளை! இதுதான் தூய்மையின் சின்னம் போலும்! ஓகோ! இப்போது விளங்குகிறது. இவள்தான் கல்விக்கரசியான கலாவாணி சரஸ்வதி தேவியோ?

"அம்மா! கலாவாணி! வணக்கம் தாயே!"

"அடடே! என்னை எப்படியப்பா பார்த்ததுமே உணர்ந்து கொண்டாய்?"

"இதிலென்ன அதிசயம் தாயே! எங்கள் நாட்டில் நூற்றுக்குத் தொண்ணூறு பேர் தற்குறிகளானாலும், நூற்றுக்கு நூறு பேருக்கும் உன்னை அடையாளம் தெரியுமே! எனக்குத் தெரிவதில் என்ன புதுமையிருக்கிறது?"

"ஆமாம். நானும் அறிவேன், நாள்தோறும் என்னைப்பாடாத மாணவரே இல்லை. எனக்கு வணக்கம் செலுத்தியபின்தான் எல்லாப் பள்ளிகளும் துவக்கப்படுகின்றன. தப்பித்தவறி ஏதாவது காகிதம் காலில் பட்டு விட்டால் "அடடா! சரஸ்வதி!" என்று அதைக் கையாலெடுத்துக் கண்ணில் ஒற்றிக் கொள்ளாதவர்களே கிடையாது. படித்தவர், படிக்காதவர் அனைவருக்கும் என்னைத் தெரியும். உண்மைதான். ஆனால்......"

"ஆனால் என்று நிறுத்தி விட்டாயே! ஆனாலும் நீ தமிழ் நாட்டார்க்குச் செய்துவரும் துரோகம் சரியானதா என்று யோசிக்கிறாயா? அத்தனை பேரும் உன்னை வணங்கி வாழ்த்துகிறார்கள் யாவரும். உனக்காக ஆயுத பூஜை கொண்டாடுகிறார்கள். எத்தனை பேருக்குக் கையெழுத்துப் போடக் கற்றுக்கொடுத்திருக்கிறாய்?

"தம்பி! உனக்கு ஆதிமுதல் அந்தம் வரை எல்லாச் சங்கதியும் தெரியாதா? இந்தக் கல்வியிலாகாவை நான் ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் என்ன? எப்போது ஏற்றுக்கொண்டேன் என்பது நீ அறியாததா? அப்படியிருக்க நான் சுயமாக ஏதும் செய்யக்கூடுமா?"

"எனக்கும் ஓரளவு உன் கதை தெரியும். ஆனாலும் உன் வாயாலேயே கேட்டறிய விரும்புகிறேன்"

"நீ விரும்புவதால் நான் கூறுவதிலென்ன தடை! உலக மக்களைப் படைக்கும் தொழில் பிர்மன்மீது சுமத்தப்பட்டதாம். இவருக்கு அப்போது மணமாகாதிருந்த காலம். பார்வதியின திருமணத்தில் அவள்மீது மோகங் கொண்டார். பிறகு அவளோடு கைலாயத்தில் கொஞ்சப்போகவே, இவருக்கு அய்ந்தில் ஒரு தலை பறிபோய்விட்டது. அவமானந் தாங்கமுடியாமல் தன் முழுச் சக்தியையும் பிரயோகித்து என்னைப் பெற்றார். நான் இளமையிலேயே நல்ல வனப்புடன் விளங்கினேன். பிர்மதேவனை என் தந்தையாகவே மதித்து மரியாதையுடன் பழகிவந்தேன். ஆனால் அப்போது எனக்குத் தெரியாது, இந்த அயோக்கிய சிகாமணி தன் மகளையே தாரமாக்கத் துணிவார் என்று. இவர் ஏதோ அடிக்கடி என்னை அருகிலழைத்துக் கொஞ்சிக் குலாவுமபோது கூட, பெற்ற பாசம் என்றேமதித்தேன. ஆனால் ஒருநாள் என்னை இறுக அணைத்துக் கீழே சாய்த்தார்......... இவர் எண்ணம் தெற்றெனப் புலனாகியது. 'அப்பா' என அலறினேன், மூர்க்கத்தனமாகப் பிடித்து அழுத்தினார். திமிறிக்கொண்டு எழுந்து ஓடினேன். விடாமல் துரத்தினார். நானோ பெண், எவ்வளவு காலம் ஓடி ஒளியமுடியும். இறுதியாக என்னைப் பற்றிக்கொண்டார். பல ஆசை வார்த்தைகள் பேசினார். என்னைக்கல்விக்கு அதி தேவதையாக்குவதாக ஒப்புக்கொண்டார். நான் ஒரு நிபந்தனை விதித்தேன். அதன்படி உலகின்முன் நாம் கணவன் மனைவி. ஆனால் அந்தரங்கத்தில் நாம் ஒருவரையொருவர் தீண்டக்கூடாது என்றேன். அப்போது ஒத்துக்கொள்வதுபோல் நடித்து, பிறகு வழக்கம்போல்தான் ஆரம்பித்துவிட்டார். என் மனச்சாட்சி என்னை உறுத்தியது. உலகம் பழிக்காதா என்று அஞ்சினேன். அவர் கூறினார், "இந்த வைப்பு வரம்பெல்லாம் சாமானிய மனிதர்க்குத்தான், நாம் பிரம்மகுலம், நமக்குள் எப்படி நடந்துகொண்டாலும் தோஷமில்லை; அப்படி ஏதாவது 'அங்கே' அசுத்தமானால்கூட ஒரு கரண்டி நெய்யினால் பரிகாரம் செய்துவிடலாம்." என்று எப்படியோ ஒருவழியாகச் சமாதானமடைய நேரிட்டது. அவர் சதா என் நினைவாகவே சரஸ்வதி சரஸ்வதி என்று அர்ச்சித்துக்கொண்டே இருந்ததால், அவர் நாவில் நான் இருப்பதாக உங்கள் உலகினர் புரளி செய்துவிட்டனர். இவ்வளவுதான என் கதை......"

"இதெல்லாம் கிடக்கட்டுமம்மா, பழங்கதை. இப்போது நீ நிர்வகித்து வரும் கல்வி இலாக்கா எங்கள் நாட்டைப் பொறுத்தவரையில், இப்படி ஊழலாயிருக்கக் காரணமென்ன? உலகில் எவரும் செய்யமுடியாத அளவுக்குப் பூஜைகளும், வழிபாடுகளும், மரியாதைகளும், எங்கள் நாட்டில்தானே செய்கிறார்கள். அப்படியிருக்க எங்களில் படித்தவர் பத்துக்கு ஒருவர். எங்களை எப்போதும் காலடியில் மிதித்து நசுக்கிவரும் பார்ப்பனர்களில் ஆண், பெண் அத்தனை பேர்களும் படித்தவர்கள். இது எனம்மா ஓர வஞ்சனை?"

"தம்பி! நான்தான் முதலிலேயே கூறிவிட்டேனே, என்னால் எதுவும் சொந்தமாகச் செய்யமுடியாது என்பதை. நான் பெயரளவுக்குத்தான் கல்விக்கரசி. ஆனால் பிரமாவின் புதல்வர்கள் —— அதாவது யாவரும் பிர்மாவின படைப்பென்றே கூறினாலும், பார்ப்பனர்கள் தங்களை மட்டுந்தான் பிரம்மகுலம் என்று கருதிவருகிறார்களல்லவா— அவர்கள்தானே இத்தனைக்கும் காரணவான்கள். தாங்களே சிருஷ்டித்த கடவுள், வேத, புராணங்களைத் தங்கள் உயர்வுக்கே ஆக்கிக்கொண்டார்கள். மனுதர்மநூலில் சூத்திரர் படித்தால் நாவை அறுக்கவேண்டும்; படிப்

பதைக்கேட்டால் காதில் ஈயத்தைக் காய்ச்சி ஊற்றவேண்டும் என்று எழுதி வைத்து அதன்படியே உங்களைத் தற்குறிகளாகவே வைத்தார்கள்.

"இப்போது மட்டுமென்ன? தகுதி, திறமையென்ற இரண்டேவார்த்தைகளைக் கொண்டு ஒரு திராவிடன் கூடப் படிக்கமுடியாதவாறு தடுக்கிறார்களே!"

"நல்லகாலம். நடுவில் கொஞ்ச நாள் வெள்ளையரசாங்கம் நடைபெறவேதான் உங்களில் பத்துக்கு ஒருவர் வீதமாவது படிக்க முடிந்தது..."

"படித்து என்னபயன், அம்மா! படித்தவன அத்தனைபேரும் முட்டாள்களாகத்தானே இருக்கிறார்கள். உலகமே வியக்கக்கூடிய அறிவைப்பெற்றுள்ள ஒரு சண்முகஞ்செட்டியார், தன்னைச் சூத்திரனாக்கிய இந்துமதத்தைச் சேர்ந்தவன் என்று தன்னைக் கூறிக்கொள்ளப் பெருமைப்படுகிறார்; ஒரு ராமசாமிமுதலியார் தன் நெற்றி நாம மகிமைபற்றிப் புராணம் பாடுகிறார். இவர்களால் இந்தப் பாழடைந்த நாட்டுக்கு ஒரு ஊசி முனையளவாவது பயன் ஏற்படுகிறதா? மாறாக, ஏதோ எங்களாலான அறிவுப்பணி செய்து வரும்போது, இடையூறுதான் ஏற்படுகிறது..."

"இந்தக் கோளாறுகள் அனைத்துக்கும் முதல்குற்றவாளிகம்பன்தான். இனத்துரோகிகளில் முதல்வன். தன்னைப்போலவே தமிழரினத்தில் ஏராளமான விபீஷணர்களையும் அனுமார்களையும் சிரஞ்சீவிகளாகப் படைத்துவிட்டான், இந்தக் கயமைக்குணம் படைத்த கம்பன். இவனுக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ள முதலில் என்னைவேறு வணங்கி வாழ்த்துப் பாடுகிறான்..."

"அவன்தானா உன்னை வாழ்த்தினான்? கம்பனுக்குப்பின் வந்த அவ்வளவு பக்திமான்களும் புத்தியைப்பறி கொடுத்து விட்டுக் காமச்சுவையும், கருத்துக் கொவ்வாப்புளுகும் நிறைந்த கவிதைகளைப் பாடிவைத்துவிட்டு, அவ்வளவுக்கும் பிராயச்சித்தம்போல், இவ்வளவும் கலைவாணியின் அருளால் பாடப்பட்டவை என்று கூறினார்கள். புதுமைக்கவியெனப் புகழப்படும் பாரதியார்கூட "வெள்ளைத் தாமரைப் பூவிலிருப்பாள், வீணைசெய்யும் ஒலியிலிருப்பாள்" என்று தாமே நேரிற் கண்டவர்போல் கூறிவிட்டார். இப்படி யாவரும் புளுகிவைத்து என்ன பலன் ஏற்பட்டது? அந்தக் காலத்தில் எவ்வளவோ சீரும் சிறப்புமாய் வாழ்ந்து வந்த ஒரு இனம், இன்று எடுப்பார் கைப்பிள்ளையாய் ஏழ்மையும் அறியாமையும் சூழ்ந்துகிடக்கிறது. இன்னும் ஒரு நூற்றாண்டு இப்படியே விட்டுவிட்டால் தன்னைத் திராவிடன் என்று கூறிக்கொள்ள நிச்சயம் ஒரு மனிதன்கூடக் கிடைக்கமாட்டான் இந்த நாட்டிலே..."

"அது என்னவோ உண்மைதான். எப்படி முதலாளிகள் சதாத் தொழிலாளிகளை அடக்கி வைத்துக் கொண்டு தாங்கள் கொள்ளை லாபம் அடிக்கிறார்களோ, அப்படியே பிறவி முதலாளிகளான பார்ப்பனரும், மற்றவர்களுக்கு அறிவு வளர்ந்துவிட்டால் இன்று தங்களுக்கிருந்துவரும் உயர் வாழ்வு ஒழிந்துவிடுமேயென்ற அச்சத்தால்தான் பலவகையிலும் முயற்சி செய்து வருகிறார்கள்......"

"அம்முயற்சிக்கு இடையூறாகப் பதவியிலுள்ளவர் யாராயிருந்தாலும் ஒழித்துக்கட்டிவிடுகிறார்கள். எங்கள் கல்வி மந்திரி (மாஜி) அவினாசிலிங்கனார் கதி இதுதானே!"

"ஆமாம். கல்லூரி முழுவதும் கல்வியெனும் தெள்ளிய நீரோடை எங்கும் இந்தப் பார்ப்பன முதலைகளே திறந்த வாயுடன் காத்திருக்கின்றன. அதில் கால்வைக்கும் திராவிட மாணவர், முதலைக்கு இரையாக வேண்டியதுதான். இந்த முதலையுண்ட பாலர்களை அழைக்க எந்தச் சுந்தரர் செந்தமிழும் வராது. இவ்வளவு அறியாமை நிரம்பிக்கிடக்கும் மக்களிடம் பக்திக்குக் குறைவா? ஆண்டுதோறும் கிழிந்த பஞ்சாங்கம், ஆனந்தவிகடன் முதலிய குப்பைப் புத்தகங்களை வைத்து பொட்டு, பூவிட்டு சரஸ்வதி பூஜை நடத்துவான், தன் பெயரை 'ராமஜாமி' என்று கையெழுத்துப் போடும் தோழன். உலகம் உண்டான காலத்தில் ஆதிமனிதனால் நிலத்தை உழுவதற்கும் கொத்துவதற்கும் கண்டுபிடிக்கப்பட்ட அதே ஏர், மண்வெட்டி முதலியவைகளை இந்த 1949-ம் ஆண்டிலும் உபயோகித்துவரும் தோழன், அவைகளையும் வைத்து ஆயுத பூஜை நடத்துவான். இது மட்டுமா? கொள்ளை லாபம் அடிப்பவன், கள்ளச் சந்தைக்காரன், திருட்டுக் கணக்கெழுதுவோன், தேய்ந்தபடிக்கல், சாய்ந்த தராசு, குறைந்த படி உபயோகித்து வியாபாரம் செய்பவன் இவர்களும்தான் உன்னை வணங்கி வழிபடுகிறார்கள். ஆனால் நீயும் உன் மாமியாரும் (லெட்சுமி) இவர்களுக்குத்தான் அருள் செய்கிறீர்கள் அல்லது உங்களைப் பற்றிக் கனவிலும் கேட்டறியாத மற்ற நாட்டாரைத்தான் நீங்கள்நாடுகிறீர்கள். முதலில் உன்னை இந்த நாட்டைவிட்டுத் தூரத்திவிட்டால்தான், உண்மையிலேயே இந்நாட்டில் அறியாமையும் அகலும். போதும் உங்கள் வஞ்சக வேலை. ஏ கலைவாணி, கலைவாணி!!......

* *

"என்னடா தம்பி அது! களவாணி, களவாணி என்று கத்துகிறாய். ஏதாவது திருடன் வருகிற மாதிரி கனாக் கண்டாயா? எழுந்திரடா" என்று வாஞ்சையுடன் கூறித் தட்டி எழுப்பினார்கள் பாட்டி.

["பெருச்சாளி"]

(2ம் பக்கத்தொடர்ச்சி)

யாக்கிரகத்தின் மூலமாய் அடைந்த தண்டனையிலிருந்து நான் விடுதலையாகித் தமிழ் நாட்டிற்கு வந்த உடன், மறுபடியும் வைக்கம் போகாமலிருப்பதற்காக வேண்டி ஒரு பார்ப்பனச் சட்ட மெம்பரையும், ஒரு பார்ப்பன அட்வகேட் ஜெனரலையும் கொண்ட கவர்ன்மெண்ட், எட்டு ஒன்பது மாதங்கட்கு முன்னால் பேசிய பழைய குப்பைகளை ஆதாரமாக வைத்து, ராஜ துரோகம் முதலிய கேஸ் எடுத்து, அதன் மூலமாகக் கைதியாக்கிக் கொண்டு போனார்கள். பார்ப்பனர்களின் பொல்லாத வேளையாய் ஒரு பார்ப்பனரல்லாத மாஜிஸ்திரேட்டிடம் அந்தக் கேஸ் நடந்தபடியால், கேஸ் ஒன்றும் ருஜுவாகவில்லை என்று அவர் கேசை முடித்துத் தண்டிக்காமல் ஓட்டிவிட்டார். இவ்வளவுமல்லாமல் பார்ப்பனரல்லாத மந்திரிகள்-பெரிய உத்தியோகஸ்தர்கள் லஞ்சம் வாங்குகிறார்கள், லஞ்சம்வாங்குகிறவர்கள் அது செய்கிறார்கள், இது செய்கிறார்கள் என்று கிராமம் கிராமமாய், ஊர் ஊராய்ப் பிரச்சாரம் செய்வதற்குப் பணம் செலவு செய்து ஆட்களை ஏற்படுத்தி பிரச்சாரம்செய்து, அவர்கள் பேரில் தப்பபிப்பிராயத்தைக் கற்பித்து வந்தார்கள்.

குருகுலம் சம்பந்தமாய் நடந்த கூட்டங்களில், பார்ப்பனர்கள் கல்லெடுத்துப் போட்டார்கள். சென்னைக் கார்ப்பரேஷன் தேர்தல்களில் தோழர் ஆரியாவை ஆட்களைவிட்டு அடித்தார்கள். பொதுவாய் ஏழைகளுக்கும், முக்கியமாய்ப் பார்ப்பனரல்லாதவர்களுக்கும் அவசியமானதாகிய மதுவிலக்கு, தீண்டாமை முதலிய திட்டங்களைக் காங்கரசைவிட்டு ஓட்டிவிட்டார்கள்.

பார்ப்பனரல்லாதார், தெய்வத்தின் பேராலும் க்ஷேத்திரங்களின் பேராலும் காணிக்கை, வேண்டுதல் மூலமாகக் கொடுக்கின்ற பணங்கள், ஒழுங்கான வழியில் செலவழிப்பதற்காக ஏற்பட்ட தேவஸ்

ரோஜா முத்தையா

தான ஆக்டானது, பார்ப்பனர்களுடைய எவ்வளவோ எதிர்ப்புக்களுக்கும் கண்டனங்களுக்கும் தப்பி நிறைவேறி விட்டபடியினால், அந்த ஆக்டே செல்லாதென்றும், அதை எடுத்துவிட வேண்டுமென்றும், (இப்போது அதன் திருத்தத்தை எப்படி எதிர்க்கிறார்களோ அப்படியே) அதை அமுலில் இல்லாமல் சஸ்பெண்டு செய்வதற்கு இன்சக்ஷன் தடை கோரி, ஹைகோர்ட்டில் மகந்துக்கள் பேரால் வியாஜ்யம் தொடுத்தார்கள். இதற்கு வக்கில்களோ தோழர்கள் எஸ். சீனிவாசய்யங்கார், டி. ரங்காச்சாரியார், டி. ராமச்சந்திர அய்யர் மகந்துப் பக்கமும், இதற்கு எதிர் வக்கிலாய் ஏற்பட்டவரோ அட்வகேட் ஜெனரலான தோழர் டி. ஆர். வெங்கிட்டராம சாஸ்திரிகள் என்கிற பார்ப்பனருமே. இந்த ஆக்ட் ஒழிய வேண்டுமென ஹைக்கோர்ட்டில்பிராது தொடுத்திருந்தாலும், இந்த ஆக்டின் மூலமாய் ஏற்பட்ட உத்தியோகங்கள் எல்லாம் தங்களுக்கே கிடைக்க வேண்டுமென்று, தேவஸ்தான போர்டு ஆபீசையும், மந்திரி வீடுகளையும் பார்ப்பனர்கள் மற்றொரு பக்கம் சுற்றிக்கொண்டுதான் வந்தார்கள்.

இவையெல்லாமிருக்க, உலகப் பெரியார் காந்தியாரையே ஒழிப்பதற்காக, 'ப்ராமணன்' என்கிற ஒரு பத்திரிக்கையையும், சங்கராச்சாரியார்கள் மகந்துக்கள் முதலிய பார்ப்பன சிரேஷ்டர்கள் என்போரின் ஆதரணையில் ஆரம்பித்ததும் இப்போதுதான். இதே நேரத்தில் மற்றொரு பக்கம் காந்தியாரின் பெயரைச் சொல்லிக்கொண்டு பதவிகளையும், சட்டசபை ஸ்தானங்களையும் பெறுவதற்குப், பார்ப்பனரல்லாதாரை எமாற்றியும் அலைந்து கொண்டுதானிருந்தார்கள். இதற்குச் சில பார்ப்பனரல்லாதாரையும் மிரட்டிச் சுவாதீனப் படுத்திக் கொண்டார்கள்.

தினசரிப் பத்திரிகைகள் (இன்றைக்குப் போலவே அன்றைக்கும்) தங்கள் கைகளில் இருக்கிற காரணங்களால், பாமர ஜனங்களை எமாற்றித் தங்கள் வசப்படுத்திக் கொள்வதோடு, சில முக்கியமான பார்ப்பனரல்லாத திராவிடர்களைத் தலையெடுக்க வொட்டாதபடி, பத்திரிகைகளில் ஊர், பேர் தெரியாத பார்ப்பனரல்லாதாரின் பொய்ப்பெயர்களை இட்டு தூற்றுதலான வியாசங்களை எழுதுவதும், பார்ப்பன வக்கீல்களிடம் (அப்ரென்டிஸ்) அதாவது வேலை படிக்கும் பார்ப்பனரல்லாத வக்கில்களான, வாலிபர்களின் கையெழுத்தைப் போடச் செய்து, அவர்கள் பெயரால் பார்ப்பனரல்லாதாரை வைது, பத்திரிகைகளில் எழுதுவதும், வயிற்றுக்கில்லாதவர்களினுடையவும், பணத்தாசைபிடித்தவர்களினுடையவும் தேசபக்தியையும் விலைக்கு வாங்கிக்கொண்டு, அவைகளைப் பார்ப்பனரல்லாதாருக்கு விரோதமாக உபயோகப்படுத்திப் பணச்செருக்கால் செய்து வந்தது சென்னைத் தேர்தல்களிலும் மற்றத் தேர்தல்களிலும் அப்போது நன்றாக அம்பலமாகியது.

ஸ்தல ஸ்தாபனங்களில் பார்ப்பனரல்லாதாருக்குள் கட்சிப் பிரதிகட்சிகளை உண்டாக்கி, இவர்களைக் கோர்ட்டுக்குச் செல்லும்படி அப்போது செய்ததும் பார்ப்பனர்களேயாகும்.

தேசீயப் பார்ப்பனர்கள் பார்ப்பனரல்லாதாருக்குச் செய்துள்ள கொடுமைகள் இவ்வளவு தானென வரையறுத்துவிட முடியாது. அவர்கள் செய்தவையும், இன்னும் செய்யப்போகின்றதுமான காரியங்கள் எவ்வளவோ இருக்கின்றன. அவைகளைச் சமயம் நேரும் போது வெளியிட நாம் பின் வாங்கப் போவதில்லை.

# இலட்சியவாதி!

★

யார் யார், இலட்சியவாதிகள்? இலட்சிய வாதிகளுக்கு இருக்கவேண்டிய கொள்கைகள் என்னென்ன? எந்தெந்தக் கருத்துக்களை, கொள்கைகளைக் கொண்டவர்கள் இலட்சிய வாதிகள்? என்பவைகளை இலட்சியவாதிகளாக விரும்புகிறவர்களும், இலட்சியவாதிகளாக இருக்கின்றவர்களும், நன்றாக உணர்ந்து கொள்ள வேண்டும்.

இலட்சியவாதிகள் எந்தச் சமயத்திலே இலட்சியவாதிகளாக ஆகின்றார்கள் என்பதையும், ஆகவேண்டும் என்பதையும் புரிந்து கொள்ளவேண்டும். மழலைப்பருவத்திற்கும் இளமைப் பருவத்திற்கும் இடையிலே, சிலர் இலட்சியவாதிகளாக இருப்பார்கள். இளமைப்பருவத்திற்கும் முதுமைப் பருவத்திற்கும் மத்தியிலே சிலர் இலட்சியவாதிகளாக இருப்பார்கள். முதுமைப் பருவத்திற்கும், மரணப்படுக்கைக்கும் இடையிலே சிலர் இலட்சியவாதிகளாக இருப்பார்கள். பொதுவாக ஒரு இலட்சியவாதி, இளமைப் பருவத்தில் தான் கொண்ட கருத்தினை இடுகாடு செல்லும் வரையில் வைத்திருந்தால், அதற்கு ஒரு வகைச் சிறப்பும், இளமைப்பருவத்தில் ஒரு கருத்தோடு விளையாடி, முதுமைப்பருவத்தில் ஒரு கருத்தினை இலட்சியமாகக் கொண்டு இறந்தால் அதற்கு ஒரு வகைச் சிறப்பும், அதே காலத்தில் சூழ் நிலையால் பாழாகி, கொள்கைகள் என்பதே ஏதுமின்றி, கடைசி காலத்தில் அதாவது இறக்கும் வேளையிலே ஒரு குறிக்கோளைக்கொண்டிருந்தால், அதற்கு ஒரு வகைச் சிறப்பும் நாட்டிலே நிலவி வருகிறது.

ஆதிகாலந்தொட்டு வாழ்வின் அந்திக் காலம் வரையிலே ஒரே குறிக்கோளைக்கொண்டு -கொள்கையினைக் கடைப் பிடித்து வாழ்ந்தவர்கள்உலகில் மிகச் சிலரேதான் இருந்தார்கள், இருக்கிறார்கள்.

இடையிலே கருத்தைக்—குறிக்கோளைக்—கொள்கையினை மாற்றிக் கொண்டவர்கள் தான் மிகப் பலராவர். அவர்களை இலட்சியவாதிகள் என்று சொல்ல முடியாது. ஆதியில் தன் மனதில் பட்டதைத் தன் மரணப் பருவம் வரையில் மாற்றிக்கொள்ளாது, உழைத்த உத்தமர்களைத்தான் இலட்சிய வாதிகள் என்று கூறுவோம். அவர்கள்தான வீரர்கள் என்றும், ஆராய்ச்சியாளர்கள் என்றும், அஹிம்சாவாதிகள் என்றும், அரசியல் மேதைகள் என்றும் காட்சியளிக்கின்றார்கள். அவர்களைத்தான் நாம் வால்டயர் என்றும், ரூஸ்ஸோ என்றும், லெனின் என்றும், மார்க்ஸ் என்றும், கொலம்பஸ் என்றும், சாக்ரட்டீஸ் என்றும், ஆப்ரகாம் லிங்கன் என்றும், இயேசு என்றும், நபி என்றும், புத்தர் என்றும், காந்தி என்றும், பெரியார் என்றும் இப்படியாகப் பலப்பல உருவங்களிலே காண்கின்றோம்.

இந்த மேதைகளெல்லாம் அக்காலத்தில் கல்லால் அடிபட்டவர்களாகவும், கழியால் தாக்கப்பட்டவர்களாகவும், சிலுவையில் அறையப்பட்டவர்களாகவும், சிறைச்சாலையில் அடைக்கப்பட்டவர்களாகவும், அங்கே சித்ரவதை செய்யப்பட்டவர்களாகவும், நஞ்சூட்டப்பட்டவர்களாகவும், நாடு கடத்தப்பட்டவர்களாகவும் நமக்குக் காட்சியளிக்கிறார்கள். இந்தத் தலைவர்களின் வரலாற்றினை எண்ணிப் பார்க்கும் போது, ஒரு வேளை இளை

ஞர்களுக்கு ஆனந்தம் பிறக்கும், மறு வேளை ஆத்திரம் பிறக்கும்; ஒரு சமயம் அமைதி தோன்றும், மறுசமயம் அஹிம்சை மலரும்; ஒரு முறை உடல் சிலிர்க்கும், மறுமுறை உள்ளம் குமுறும்; ஒரு தரம் கண்ணீர் உதிரும், மறு தரம் களிப்புப்பொங்கும்.

இலட்சியவாதிகளின உழைப்பெல்லாம், மக்களின் மன மண்டலத்தில் இத்தகைய நிலையினை உண்டாக்கும். அவர்களின் வாழ்வெல்லாம் தொல்லைக்கும் துயரத்திற்கும்தான் ஆளாக்குமேயன்றி ஆனந்த வாழ்விற்கோ, அமைதியைக் காண்பதற்கோ உதவியதில்லை. அது முடியாத காரியம்! இலட்சியவாதி என்ற வார்த்தைக்குப் பொருள் சொல்லவேண்டுமென்றால், எதையும் சகித்துக்கொள்ளும் தன்மை படைத்தவன், தன் நாளிலே பலனை எதிர்பாராமல் இருக்கவேண்டியவன் என்பதுதான் பொருத்தமான பதிலாகும். அப்படித்தான் இருக்கமுடியும்.

தளராத உள்ளமும், எதையும் தாங்கிக்கொள்ளச் சக்தியும், உள்ளத்தில் இருப்பதை ஒளிக்காமல் சொல்லிவிடும் மனப்பாங்கும், எவர்க்கும் அஞ்சாத திறனும், எந்தவகையிலும் ஏமாந்து போகாத தன்மையும், எது கூறினும் தீயவை தள்ளி, தூய்மையை ஏற்கும் நல்லுளமும், கட்டுப்பாட்டைக் காக்கும் சக்தியும், பொறுப்பைப் பாதுகாக்கும் விருப்பும், கடமையைச் செய்தே தீரும் நெஞ்சுரமும், இலட்சியவாதிகளின் ஆயுதங்களாகும்.

இலட்சியமெனும், எண்ண அலைகளை அல்லல் எனும் புயல்வந்து தாக்கும். இவன் அந்தப் புயலைத் தாங்கும் சக்தியோ, அன்றி சகித்துக்கொள்ளும் தன்மையோ படைத்திருக்க வேண்டும். இவை இல்லாதவன் இலட்சியம் சூன்யமாகிவிடும்! அவன் ஆசை, அவனை இலட்சியவாதியாக ஆகவேண்டும் என்கிறது, அவன் நிலையோ இதைத் தடுக்கின்றது.

"இலட்சியவாதி" கல்லுடைப்போனைக் கண்டு கலங்குகிறான். காரில் செல்வோரைக்கண்டும் கலங்குகிறான். வேலாமரத்தில் கட்டப்பட்டிருக்கும் தொட்டிலில் தலையைத் தொங்கவிட்டு, தாயைக் காணாது வானை நோக்கிப் பாலுக்கு அழுது துடிக்கும் பச்சிளங் குழந்தையைப் பார்த்து பரிதாபப்படுகிறான். பாலைக் குடி, குடி யென்று வேலைக்காரர்கள் கூற, வேண்டாம், வேண்டாம் என்று சொல்லிடும், மாளிகைக் குழந்தையையும் பார்க்கிறான். எண்ணெய்ப் பசையற்று, கந்தல் உடை பூண்டு, பிச்சைக்குக் கையேந்திக் காத்து நிற்கும் ஏழையைப் பார்த்துக் கண்ணீர் சிந்துகிறான். வர்ணப் பட்டாடை அணிந்து, வண்டிக்காரா! இங்கு வா, சென்னைக்கு முதல் வகுப்பு டிக்கட் வாங்கு! என்று கூறி நூறு ரூபாய் நோட்டை வீசும் கோமானைக் கண்டும் கனல் சிந்துகிறான். தான் காணும் மாறுபட்ட நிலையினைக் கண்டு துக்கப்படுகிறான். கண்ணீர் வடிக்கிறான். இவைகளைக் கண்டு சோர்ந்துபோகாதவன் "இலட்சியவாதி". இந்தக் காட்சிகள்தான் இலட்சியவாதிகளின் போர்க்களம்! இலட்சியவாதி எவ்வளவு மாறுபட்ட கருத்துக்களை எவ்வளவு விரைவில் அறிகிறானோ, அவ்வளவு விரைவில், அவன் இலட்சியவாதியாகிவிடுவதற்கு வழி பிறக்கிறது.

எந்தக் கருத்தினை இலட்சியமாகக் கொள்ளவேண்டும்? என்பதை இலட்சியவாதிகள் தன்முயற்சிக்கு முதலில், புரிந்து முடிவுகட்டிக் கொள்ள வேண்டும். அவன் பாடுபடும் நாட்டில், அல்லது சமுதாயத்தில் பணக்காரர் அதிகமா? பாரிகள் அதிகமா? விவசாயிகள் அதிகமா? சிற்றரசர்கள் அதிகமா? ஏமாறுவோர் அதிகமா? ஏமாற்றுவோர் அதிகமா? உழைப்பவர் அதிகமா? உல்லாச வாழ்வினர் அதிகமா? சுரண்டுபவர் அதிகமா? சூழ்ச்சிக்காரர் அதிகமா? ஆணவக்காரர் அதிகமா? அடிமையாகுவோர் அதிகமா? என்பவைகளைத் தெரிந்து, பிறகு நமக்கு வேண்டுவோர் யார்? வேண்டாதவர் யார்? அவர்கள் இருந்தால் என்ன லாபம்? இவர்கள் இருந்தால் என்ன நஷ்டம்? அவர்கள் ஒழிந்தால் யாருக்குத் தீமை? இவர்கள் ஒழிந்தால் யாருக்கு நன்மை? என்பவைகளைப் பலமுறை யோசித்து, இறுதியில் தன் கருத்து எதைக் கூறுகிறதோ, அதைச் செய்ய முனைய வேண்டியவன்தான் இலட்சியவாதி! அவன்தான் இலட்சியவாதியாக முடியும். அவனின் கடைசி முடிவுதான் அவனைத் தூய்மைத் துறைக்கு அழைத்துச் செல்லும். அந்தத் தூய்மைத் துறையிலே அவன் செல்லும் போதுதான், அறியாமையைப் போக்குவதற்கோ அநீதியைத் தீய்ப்பதற்கோ பாடுபடும்போது, எத்தகைய இடையூறுகளையும் பொறுத்துக் கொள்ளவேண்டும் என்ற எண்ணம் முளைக்கிறது.

இலட்சியவாதிகள், தான் செல்லும் பாதையிலே இன்னல்கள் ஏற்படுமோ? என்று சந்தேகக் கண் கொண்டு பார்க்கக் கூடாது! வெற்றி கிட்டுமா? என்று யோசித்து நிற்கக்கூடாது! செல்லும் வழி கரடு முரடானதுதான், முட்கள் நிரம்பியதுதான், மனதை மயக்கும் காட்சிகளும் உடலைக்குலுக்கும்நிகழ்ச்சிகளும், ஏற்படும் என்பதைத் தெரிந்தேயிருக்கவேண்டும். தன் காலத்திலே இலட்சியவாதிகளுக்குப் பெரும்பாலும், வெற்றி கிட்டுவதில்லை. இதனை எதிர்பார்த்தே பணி புரிந்தால்தான், உள்ளம் உடைந்துபடாமல், கருத்துக் குலைந்துவிடாமல் தொண்டாற்ற முடியும்.

ஆதியிலே பாடுபடச் செல்லும் போது எந்த இலட்சியவாதிகளுக்கும் துணையிருப்பதில்லை. அவனை மக்கள் நம்பக்கூட மறுப்பார்கள்! இவன் "பைத்தியக்காரன்" என்றும் சொல்லுவார்கள். பொறுத்துக்கொள்ளவேண்டும், சகித்துக் கொள்ளவேண்டும். இலட்சியவாதிகளின் வாழ்நாட்களுக்குப் பிறகுதான் அவர்களின் கருத்துக்களும் குறிக்கோளும் வெற்றிபெறும் நிலையை அடையும்.

இலட்சியவாதிகளின் குறிக்கோளோ நாளுக்கு நாள் விரிந்து கொண்டேபோகும். இலட்சியவாதிகளுக்கு எந்த அளவோடு தன் இலட்சியத்தை நிறுத்திக்கொள்ள வேண்டும் என்பதிலே இலட்சியம் இல்லையா? என்று கேட்கத்தோன்றும். நியாயமான கேள்விதான்! பொது நல வாழ்விலே, ஈடுபட்டவர்களின் இலட்சியமெல்லாம், பெற்றோர்களின் உள்ளத்தைப் போன்றவை! இவை இலட்சியவாதிகளுக்கு இருக்கவேண்டிய அம்சங்களாகும்.

தொல்லைகளைக்கண்டு துயர்ப்படுவதோ, விதியை நினைத்து வேதனைப் படுவதோ, முயற்சிக்கு முட்டுக்கட்டை வருகிறபோது மனங் கலங்குவதோ, இவைகளில் எது இருக்குமானாலும் "இலட்சியவாதி" தன் இலட்சியத்தை அடையவே முடியாது. இலட்சியவாதி எதைக்கண்டு மனங் கலங்கினாலும் அந்தக் கலக்கம் அவனுக்குக் கரிமண் கலமாகும். அந்தக் கரிமண் கலத்தை இலட்சியமெனும் கடலிலே செலுத்துவானால், அவன் இ[illegible] [illegible]ற்போயினும் ஆச்சரியமில்லை. எனவே கலக்கம் கொள்ளாது, துயருறும் மக்களின் துயரத்தைப் போக்க, அறிவற்ற மக்களின் அறியாமையை நீக்க, உணவின்றித் தவிப்போரின் ஏழ்மையை விலக்க இலட்சியவாதிகள் பாடுபடவேண்டும். நீதி நிலைக்க, நேர்மை மறையாதிருக்க கொடுமையை ஒழிக்க, இளைஞர்களைப் புது உலகத் தூதுவர்களாக்க நாட்டின் நலத்திற்கும் மக்கள் தம் உயர்விற்கும் பாடுபடவேண்டியதுதான் இலட்சியவாதிகளின் கடமையும், கடனுமாகும். இப்போர்க்கொத்த இலட்சியவாதிகள்தான் நாட்டு மக்களின் அச்சாணி—ஆணி வேர்—அவர்களின் கண்கள்.

—என். ஜி. பாலகுரு

அச்சிட்டு வெளியிடும் ஆசிரியர்
என். கரிவ[illegible] தமிழன் அச்சகம்.
59. கச்சே[illegible]டு.